விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 156 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 10 செவ்வாய்க்கிழமை (24.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## புதிய அமைச்சர்கள் பதவிப்பிரமாணம்

### கடற்றொழில் அமைச்சராக டக்ளஸ்



(கொழும்பு)
புதிய அமைச்சரவையில் மேலும் 8 அமைச்சர்கள் ஜனாதிபதி கோட்டா முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர். (15ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் தட்டுப்பாட்டால் 8 வயது மாணவன் உயிரிழப்பு

### உரிய நேரத்துக்கு வாகனம் கிடைக்காததால் சோகம்

(கொழும்பு)
எரிபொருள் தட்டுப்பாட்டால் 8 வயது மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.
வயிற்று வலியால் துடித்த மாணவனை எரிபொருள் தட்டுப்பாட்டால் உரிய நேரத்தில் வைத்தியசாலைக்கு சேர்க்காததாலேயே மேற்படி 15

## அமைச்சரவை பேச்சாளராக

### பந்துல நியமனம்

(கொழும்பு)
ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன புதிய அமைச்சரவை பேச்சாளராக நியமிக்கப் 15

## அத்தியாவசியமான அரச ஊழியர்களை

### கடமைக்கு அழைப்பது தொடர்பான விசேட சுற்றறிக்கை இன்று

(கொழும்பு)
அரச ஊழியர்களை கடமைக்கு அழைக்கும் போது அத்தியாவசியமான ஊழியர்களை மாத்திரம் கருத்தில் கொள்ளுமாறு நிறு 15

### ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்கும்

# 21 ஆவது திருத்த சட்டம் அமைச்சரவையில்

(கொழும்பு)

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கட்டுப்பாடற்ற அதிகாரங்களை கட்டுப்படுத்தும், அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டம் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.**

நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த யோசனையை முன்வைத்ததாக அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

“அமைச்சரவை அமைச்சர்கள் இப்போது கட்சித் தலைவர்களுக்கு முன்மொழிவை பரிந்துரைத்துள்ள நிலையில், இது அடுத்த வாரம் அமைச்சரவையில் அங்கீகரிக்கப்படும்” என்று அமைச்சர் மேலும் கூறினார்.

21ஆவது திருத்தம், ஜனாதிபதிக்கு எதிராக பாராளுமன்றத்தை பலப்படுத்திய 19ஆவது திருத்தத்தை இரத்து செய்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கட்டுப்பாடற்ற அதிகாரங்களை 15

## துன்னாலையில் 10 பவுண் நகை திருட்டு

(கரணவாய்)
துன்னாலையில் வீட்டில் உள்ள அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 10 பவுண் தங்கநகை திருடப்பட்டுள்ளதாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.
நேற்று திங்கட்கி 15

## விரைவில் புதிய வரவு-செலவு திட்டம்

### ரணில் தகவல்

(கொழும்பு)
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று வர்த்தக சபைகள், திறைசேரி மற்றும் பொருளாதார ஆலோசகர்களின் பிரதிநிதிகளை 15

## கல்வியங்காடு எரிபொருள் நிலையத்தில் குழப்பம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் கல்வியங்காடு தனியார் 24 மணி நேர எரிபொ 15

## எரிபொருள் விலைகள் மீண்டும் அதிகரிப்பு?

(கொழும்பு)
எரிபொருள் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
இதன்படி, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீட்டர் ஒன்றின் புதிய விற்பனை விலை 420 ரூபாயாகவும், ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீட்டர் ஒன்றின் புதிய விற்பனை விலை 450 ரூபாயாகவும், டீசல் லீட்டர் ஒன்றின் விற்பனை 15

## எரிவாயு இன்று விநியோகிக்கப்படாது

### யாரும் வரிசையில் காத்திருக்காதீர் லிட்ரோ நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)
எரிவாயு இன்றைய தினம் விநியோகிப்படமாட்டாது என லிட்ரோ எரி 15

## நெருக்கடியை தீர்க்க தேர்தலே ஒரே வழி

### ஜே.வி.பி. தலைவர் அனுர



(கொழும்பு)
நாட்டில் தற்பொழுது நிலவி வரும் சகல பிரச்சினைகளுக்கும் தேர்தலே ஒரேயொரு தீர்வு என மக்கள் விடுதலை முன்னணி 15

## செப்டெம்பரில் அரிசி கையிருப்பு தீரும்

### பிரதமரால் நியமிக்கப்பட்ட கண்டறியும் குழு அறிக்கை

(கொழும்பு)
நாட்டில் தற்போதுள்ள அரிசி கையிருப்பு செப்டெம்பர் நடுப்பகுதி வரை மட்டுமே போதுமானது என பிரதமரால் நியமிக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான கண்டறியும் குழுவினால் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் உள்ள 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடி அடுத்த வாரம் குறைவடையலாம்

# சர்வதேச நாணய நிதியத்திடம் முன்னரே சென்றிருந்தால் உதவிகளை இலகுவாக பெற்றிருக்க முடியும்

## மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க



(கொழும்பு)

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், அடுத்த வாரமளவில் அத்தியாவசியப் பொருட்களுக்கான நெருக்கடியை ஒப்பீட்டளவில் குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு பேசிய போதே மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

3 மாதங்களுக்கு முன்னதாக சர்வதேச நாணய நிதியத்தை நாடியிருந்தால் அவசியமான உதவிகளை இலகுவாகப் பெற்றிருக்க முடியும்.

ஆனால் வெளிநாட்டுக் கையிருப்புக்குப் பற்றாக்குறை ஏற்பட்டதன் பின்னர் இப்பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டதால் உதவிகளைப் பெறுவது கடினமான செயன்முறையாக மாறியுள்ளது.

உதவிகளைப் பெறுவதற்கு உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஆகியவற்றுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாரிஸ் கிளப் உறுப்பு நாடுகள் மற்றும் பாரிஸ் கிளப்பில் அங்கம் வகிக்காத இந்தியா, சீனா போன்ற நாடுகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தத் தீர்மானித்துள்ளோமென மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மேலும் தெரிவித்தார். (ம-7)

# மூத்த எழுத்தாளர் தெணியான் காலமானார்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, பொலிகண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஈழத்து எழுத்தாளர் தெணியான் தனது 84 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

கந்தையா நடேசு என்ற இயற்பெயரைக் கொண்ட அவர் சுமார் 40 வருடங்களுக்கு மேலாக பல சிறுகதைகள், நாவல்கள், விமர்சனக் கட்டுரைகள் என்பவற்றை எழுதி வந்துள்ளார்.

1964இல் "விவேகி" சிற்றிதழில் வெளிவந்த "பிணைப்பு" எனும் சிறுகதையுடன் அவரது எழுத்துலகப் பிரவேசம் ஆரம்பமானது.

சுமார் 150 சிறுகதைகள், 30 கவிதைகள், 8 நாவல்கள், 3 குறுநாவல்கள், 100க்கும் மேற்பட்ட விமர்சனக் கட்டுரைகள் என்பனவற்றை அவர் எழுதியுள்ளார். (ம-7)

# 9ஆம் திகதி வன்முறை பிரதேச சபைத் தலைவரிடம் சிஐடி வாக்குமூலம்


(கொழும்பு)

கடந்த 9ஆம் திகதி கொள்ளுப்பிட்டி மற்றும் காலிமுகத்திடல் பகுதியில் ஏற்பட்ட அமைதியின்மை சம்பவம் தொடர்பில் வல்லாவிட்ட பிரதேச சபைத் தலைவர் உதேனி அத்துகோரள மற்றும் மில்கோ நிறுவனத்தின் தலைவர் ரேனுக பெரேரா ஆகியோரிடம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது. (ம-7)

# மரண அறிவித்தல்

## இளையதம்பி இரத்தினசிங்கம் (ஆச்சாரியார்)



யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் குறிசுட்டகுளம் நெடுங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி இரத்தினசிங்கம் (ஆச்சாரியார்) அவர்கள் நேற்று (23.05.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - சிவபாக்கியம் (சிவப்பு) தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி நாகலிங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம், பேரின்பநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்லையா, அருளம்மா ஆகியோரின் மைத்துனரும் தவபாலன் (ஜேர்மனி), ராசேஸ்வரி ஆகியோரின் சித்தப்பாவும் பரமேஸ்வரி, தங்கேஸ்வரி, உலகேஸ்வரி, சத்தியசிறி (சிற்பாசாரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஐயாறு (மகாலிங்கம்), மகேந்திரராஜா, தியாகராசா, மங்களேஸ்வரி (குட்டி) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.05.2022) செவ்வாய்க்கிழமை மாலை 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நெடுங்கேணி வேலன்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-4366)

# மரண அறிவித்தல்



திருமதி

## தியாகராஜா ஐயா காமாட்சி அம்மா

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னாலை சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தா காலஞ்சென்ற தியாகராஜா ஐயாவின் பாரியார் காமாட்சி அம்மா அவர்கள் நேற்று (23.05.2022) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - சிவகாமி தம்பதியரின் மகளும் பொன்னுத்துரை - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற பண்டிதர் பொன்னம்பலவாணர் ஐயா, மங்கையற்கரசி, ஞானாம்பிகை, வடிவாம்பிகை, அருண்மொழித்தேவர் ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் கந்தையா, சியாமளா (உமா) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான ஞானபூரணி (விதுசா), கேதீஸ்வரன் மற்றும் கணேதீஸ்வரன் (ஈசன்), ஜெகதீஸ்வரன் (ஜெகன்), தனஜா, விதுஜா ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (23.05.2022) திங்கட்கிழமை பொன்னாலை இந்து மயானத்தில் இடம்பெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அருண்மொழித்தேவர் (மகன்) +61450946433
கணேதீஸ்வரன் (பேரன்) 077 435 4468
ஜெகதீஸ்வரன் (பேரன்) 076 220 9683

(C-4367)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர்ச்செய்கைக்கான விதைகளுக்கும் தட்டுப்பாடு

**(கொழும்பு)**

**நாட்டில் தற்போது நிலவும் அந்நிய செலாவணி பிரச்சினை காரணமாக, நெல், காய்கறி, பெரிய வெங்காயம் மற்றும் ஏனைய பயிர்களுக்கான விதைகள் போதுமான அளவில் இல்லை.**

விதைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை கமத்தொழில் துறையில் மிக முக்கியமான பிரச்சினையாக மாறியுள்ளது. இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் கமத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற குழுவின் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. இந்தியாவின் கடன் யோசனை முறையின் கீழ் இலங்கைக்கு 65 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியாவை வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 40 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் பயிர் செய்கைக்கும், 20 ஆயிரம் மெற்றிக் தொன் சேனை பயிர் செய்கைக்கும் வழங்க எதிர்பார்த்துள்ளோம் எனவும் கமத்தொழில், பசளை மற்றும் பெருந் தோட்டத்துறை சம்பந்தமாக காணப்படும் பிரச்சனைகள் தொடர்பான விபரங்களை கண்டறிய நியமித்த குழுவின் தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

பசளைகளை வழங்காது போனால், வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்து 300 முதல் 400 ரூபாவுக்கு விற்பனை செய்ய நேரிடும் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

# மருந்துகள் இன்மையால் நோயாளிகள் மரணிக்கும் நிலை

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டால் விரைவில் மரணங்கள் நிகழலாம் என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

80 வீதமான மருந்துகள் இலங்கையினால் இறக்குமதி செய்யப்படுகின்றன. எனினும், அந்நியச்செலாவணி தட்டுப்பாடு காரணமாக, மருந்து இறக்குமதி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பல மருந்துகளுக்கு சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மஹரகம மருத்துவமனை புற்றுநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் நாட்டின் முதன்மையான மருத்துவமனையாகும். இதில் 950 படுக்கைகள் உள்ளன.

ஆனால் அங்குள்ள நோயாளிகள், அவர்களது உறவினர்கள், மருத்துவர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். மருந்துகள் பற்றாக்குறையால் அத்தியாவசிய சுகாதார பராமரிப்பு மற்றும் அறுவைச் சிகிச்சையை அதிகாரிகள் ஒத்திவைக்க வேண்டி உள்ளது. இந்த நிலை புற்றுநோயாளிகளுக்கு மிகவும் மோசமானது என மருத்துவர் ரொஷான் அமரதுங்க தெரிவித்தார்.

சில நாட்களில் நாங்கள் காலையில் அறுவைச் சிகிச்சைகளைத் திட்டமிடுகிறோம், ஆனால் சில நேரங்களில் மருந்துகள் பற்றாக்குறையால் அந்த நாளில் செய்ய முடியாது என்றும் விரைவில் நிலைமை சீரடையவில்லை என்றால், பல நோயாளிகள் இறக்கும் தறுவாயில் உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி)

# 21 ஆவது திருத்தம் இல்லையென்றால் பதவி விலகுவாராம் ஹரின்



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியான வேளையில் தான் அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். நேற்றுக் காலை அமைச்சராக கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்ட போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவில்லை என்றால் அரசாங்கத்தில் இருந்து விலகுவேன் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (நி)

# நாணய மாற்று விகிதங்கள்

(கொழும்பு)

மத்திய வங்கி வெளியிட்ட நேற்றைய நாணய மாற்று விகிதங்களின்படி டொலரின் விற்பனை விலை 364.42 ரூபாயாக பதிவாகியுள்ளது.


இதேவேளை ரூபாய்க்கு நிகரான டொலரின் கொள்வனவு விலை 354.45 என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதேவேளை ஸ்ட்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்விலை 443.09 ரூபாயாகவும் விற்பனை விலை 458.45 ரூபாயாகவும் ரூபாய்க்கு நிகரான யூரோ ஒன்றின் கொள் விலை 376.31 ரூபாயாகவும் விற்பனை விலை 387.05 ரூபாயாகவும் பதிவாகியுள்ளது. (நி)

# எரிபொருள் இன்மையால்

## ஊர்காவற்றுறை பாதைச் சேவை பாதிப்பு

### பயணிகள் சிரமம்



(குப்பிழான்)

காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையே பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பாதைப் படகு கடந்த ஒரு வாரகாலமாக சேவையில் ஈடுபடுத்தப்படாமையால் அரச உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் பெரும் பாதிப்புக்களை எதிர் நோக்கியுள்ளனர்.

மண்ணெண்ணெய் இன்மையாலேயே மேற்படி சேவை இடம்பெறவில்லை என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணியாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் யாழ். அரசாங்க அதிபர் உடனடிக் கவனம் செலுத்திப் பாதைச் சேவை இடம்பெறுவதை உறுதிப்படுத்துமாறும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-18)



சுழிபுரம் மேற்குப் பாரதி கலைமன்றத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மேற்படி கலைமன்ற நிர்வாகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கிப் பிரிவின் அனுசரணையில் மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சுழிபுரம் மேற்குப் பாரதி கலைமன்றத்தின் முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்- ரவிசாந்)

# 850 லீற்றர் பெற்றோலுடன் சென்ற இருவர் கைது

(கல்முனை)

மட்டக்களப்பு - வெல்லாவெளி பகுதியில் கப்ரக வாகனமொன்றில் சட்டவிரோதமாக ஒரு தொகை பெற்றோலைக் கொண்டு சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெல்லாவெளி நகரில் அமைக்கப்பட்டுள்ள வீதித்தடை ஊடாக பயணிக்க முற்பட்ட கப் வாகனமொன்றை சோதனைக்குட்படுத்திய போது அதில் 850 லீற்றர் பெற்றோல் தொகையை சட்டவிரோதமாக கொண்டு செல்ல முயற்சித்தமை தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மகா ஓயா பகுதியைச் சேர்ந்த 41 மற்றும் 47 வயதான இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்..

சந்தேக நபர்களை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதை அடுத்து. நாளை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# ஜூன் 20 இற்குப் பின் நாடு எழுச்சி பெறும்

## பிரபல ஜோதிடர் கணிப்பு

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கையில் எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு பின்னர் புதிய தலைவரொருவர் உதயமாகவுள்ளதாகவும், அதன் பின்னர் நாட்டில் பல பாரிய எழுச்சிகள் ஏற்படும் எனவும் பிரபல ஜோதிடர் கல்யாணி ஹேரத் மெனிகே தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் ஜாதகம் கும்பம் என்றழைக்கப்படும். இலங்கையின் அடையாளம் கும்பம் ஆகும். சனி இப்போது இந்த கும்ப இராசியில் இருக்கின்றார். பொதுவாக இராசியில் இருக்கும் சனி கொடியது. நாட்டை ஆளும் தலைவனுக்குக் கொடியது.

பொருளாதார நெருக்கடி காரணமாக தற்போதைய அரசாங்கம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கிவருகின்ற நிலையில், நெருக்கடிகள் மற்றும் எதிர்காலத்தில் அரசியல் களத்தில் பல மாற்றங்கள் ஏற்படவுள்ளது. ஜூலை 6ஆம் திகதி முதல் சனி விலகி ஜனவரி 19, 2023 முதல் பூஜ்ஜியத்திலிருந்து தொடங்கி, இந்த நாடு சரியான திசையில் நகரும்.

அதற்கமைய, எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு பின்னர் நாட்டிற்கு புதிய தலைவர் ஒருவர் உதயமாகவுள்ளதாகவும், அதன் பின்னர் நாட்டில் பல பாரிய எழுச்சிகள் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். தொடரின் இறுதிப்போட்டிக்கு முன்னேறப்போவது குஜராத்தா? ராஜஸ்தானா?

## ரசிகர்களிடையே பரபரப்பு





ஐ.பி.எல்.. 20 ஓவர் கிரிக்கெட் போட்டி கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதி தொடங்கியது. இதில் 10 அணிகள் பங்கேற்று விளையாடின. நேற்று முன்தினத்துடன் லீக் ஆட்டங்கள் முடிந்தன.

புதுமுகமான குஜராத் டைட்டன்ஸ் 10 வெற்றி, 4 தோல்வியுடன் 20 புள்ளிகளுடன் முதல் இடத்தை பிடித்தது.

மற்றொரு புதுமுக அணியான லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் தலா 18 புள்ளிகளும் (9 வெற்றி, 5 தோல்வி) பெற்று முறையே 2 ஆவது . 3 ஆவது இடத்தை ராஜஸ்தான் ராயல்ஸ் பிடித்தன.

4 ஆவது இடத்தை ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் ஆகிய அணிகள் முதல் 4 இடங்களை பிடித்து பிளே ஆப் சுற்றுக்கு தகுதி பெற்றன.

சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் 4 வெற்றி, 10 தோல்விகளுடன் 8 புள்ளிகள் பெற்று முறையே 9 ஆவது, 10 ஆவது இடங்களில் உள்ளன.

'பிளேஆப் சுற்று இன்று ஆரம்பமாகிறது. கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் இரவு 7.30 மணிக்கு நடைபெறும் 'குவாலிபையர்1' ஆட்டத்தில் ஹர்திக் பாண்ட்யா தலைமையிலான குஜராத் டைட்டன்ஸ்-சஞ்சு சாம்சன் தலைமையிலான ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் மோதுகின்றன.

இதில் வெற்றி பெறும் அணி நேரடியாக இறுதிப் போட்டிக்கு தகுதிபெறும்.

தோல்வி அடையும் அணி லக்னோ-பெங்களூர் மோதும் எலிமினேட்டர் ஆட்டத்தில் வெல்லும் அணியுடன் 'குவாலிபையர் 2' போட்டியில் மோதும்.

எலிமினேட்டர் சுற்று நாளை 25 ஆம் திகதி கொல்கத்தாவில் நடை பெறும். இதில் தோற்கும் அணி வெளியேற்றப்படும்.

'குவாலிபையர் 2' ஆட்டம் 27 ஆம் திகதியும், இறுதிப் போட்டி 29 ஆம் திகதியும் அகமதாபாத்தில் நடைபெறும்.

'குவாலிபையர் 1' ஆட்டத்தில் வெற்றி பெற்று முதல் அணியாக இறுதிப் போட்டிக்கு நுழைவது குஜராத்தா? ராஜஸ்தானா? என்று கிரிக்கெட் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர். (6)



யாழ்ப்பாணம், திருநெல்வேலி கலாமன்றம் விளையாட்டுக்கழகமும் , "BBK பார்ட்னர்ஷிப்" வீரர்களும் பங்குபற்றிய கலாமன்றம் பிரீமியர் லீக் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை முத்துத்தம்பி மகா வித்தியால மைதானத்தில் நடைபெற்றது.

இறுதி போட்டியில் சூரியா சூப்பர் கிங்ஸ் அணியும் , பவர் கிட்டர்ஸ் அணியும் மோதிக்கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய பவர்கிட்டர்ஸ் அணியினர் 10 பந்து பரிமாற்றங்களில் 57 ஓட்டங்களை பெற்றுக்கொண்டன. 58 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சூரிய சூப்பர் கிங்ஸ் அணியினர் 4 இலக்குகளால் வெற்றியிட்டு கிண்ணத்தை சுவீகரித்தனர். (படம் : சிவசாந்தன்)

## சம்பியனானது மான்செஸ்டர் சிட்டி

இங்கிலீஷ் பிரிமீயர் லீக் கால்பந்து தொடரில் 20 அணிகள் பங்கேற்று விளையாடும் நடப்பு சீசனுக்கான ஆட்டங்கள் நேற்றுடன் முடிந்தன.

நேற்று நடைபெற்ற போட்டியில் மான்செஸ்டர் சிட்டி, ஆஸ்டன் வில்லா அணிகள் மோதின. தொடக்கம் முதல் ஆஸ்டன் அணி சிறப்பாக விளையாடியது. ஒரு கட்டத்தில் 2-0 என ஆஸ்டன் வில்லை முன்னிலை பெற்றிருந்தது.

இறுதியில், மான்செஸ்டர் சிட்டி அணி அதிரடியாக ஆடியது. இதனால் கடைசி கட்டத்தில் 3 கோல்களை அடித்து அசத்தலாக வெற்றி பெற்றது. அத்துடன், சம்பியன் லீக் பட்டத்தையும் கைப்பற்றி அசத்தியது.

மான்செஸ்டர் சிட்டி அணி 38 போட்டிகளில் 29 வெற்றி, 6 டிரா, 3 தோல்விகள் என மொத்தம் 93 புள்ளிகள் பெற்று முதலிடம் பிடித்தது. கடந்த 5 போட்டிகளில் மான் செஸ்டர் சிட்டி அணி 4 முறை சம்பியன் லீக் பட்டத்தை கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2623

### மொறிஸ்

தரையில் கால் படாமல் சிலரை
தாங்கு தாங்கு என்று
நீ தாங்கினாலும்
கலட்டி விட வேண்டிய
இடத்தில் உன்னை கழட்டி
விடுவார்கள்.

### ஆத்மிகா



உங்களுக்காகவும் கொஞ்சம் வாழுங்கள்...
எல்லோரையும் எல்லாக் காலத்திலும்
திருப்திபடுத்த முடியாது... எப்பொழுது
அடுத்தவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு
மட்டுமே வாழாதீர்கள்!!!

### பிரதீபன்

சில மனிதர்கள் பணத்தால்
ஏழையாக இருக்கலாம்



ஆனால் குணத்தால்
கோடீஸ்வரர்கள்...!

### சாதனா

அப்போ எல்லாம் மக்கள் கையில் பணம்
இருந்துச்சு... சாமியார்கள் கையில்
'திருவோடு' இருந்துச்சு...



இப்போ எல்லாம் சாமியார்கள் கையில்
பணம் இருக்கு... மக்கள் கையில்
'திருவோடு' இருக்கு...

### தர்சித்

பெண்ணிற்கு சிறந்த
கல்வியை வழங்குவதை
விட நல்ல துணையை
அமைத்துக் கொடுத்து
விடுங்கள்...
கல்வி அவளுக்கு புகழை
தந்தாலும் புரிந்துக்
கொண்ட கணவனால்
மட்டுமே நிம்மதியை தர முடியும்!

### பிறேம்சிகா



சிலரிடமே பழகினேன் அதுவே போதும்
வாழ்க்கைக்கு தேவையான நிறைய
பாடங்களை கற்றுக்கொடுத்து விட்டார்கள்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை

# மேற்குலக நாடுகள் உதவி வழங்க வேண்டும்

## சீனா வலியுறுத்து

**(கொழும்பு)**

**உக்ரைனுக்கு உதவிகளை வழங்குவதற்கு மேற்குலக நாடுகள் முன்வந்துள்ளதைப் போன்று, கடுமையான பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள இலங்கைக்கும் தமது உதவிகளை வழங்க வேண்டும் என சீனா வலியுறுத்தியுள்ளது.**

பொருளாதார நெருக்கடியால் சீனாவின் கடன் வலையில் இலங்கை சிக்கியுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இதற்கு பதிலளிக்கும் வகையில் இலங்கைக்கான சீனத் தூதரகம் தமது டுவிட்டர் பக்கத்தில் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளது.

இலங்கை சர்வதேச சந்தையில் 47 சதவீதம் கடன் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளது.

அதில் 10 சதவீத கடனையே சீனாவுக்கு செலுத்த வேண்டியுள்ளதாக கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (நி)

## மரண அறிவித்தல்

### திரு F.X.அன்ரன் (கோட்டக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்)



பிறப்பு 19.07.1962 — இறப்பு 20.05.2022

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. F.X.அன்ரன் 20.05.2022 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் சேவியர் பிலோமினா நவறஞ்சிதம் ஆகியோரின் அன்பு மகனும், காலம் சென்ற ஸ்ரனிஸ்லொஸ் லூட்ஸ் மேரி புஸ்பராணி ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கிறிஸ்ரபெஸ் அனோஜாவின் (ஆசிரியர் யா/ வேம்படி மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும் நிக்கலின் (இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்) மாறியோ (தேசிய அபிவிருத்தி வங்கி) ஆகியோரின் அன்புத் தந்தையும் றஞ்சினி, றஞ்சன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் லொஜிற் (கனடா), கொஸ்கா (கனடா), அருட்பணி நெவில் ஞானராஜ் (அவுஸ்திரேலியா) யூடித் (கனடா) மெல்வின் (கனடா) குபேரகுலேந்திரன், கமலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் எல்விஸ், எல்றோய் ஆகியோரின் அருமை சித்தப்பாவும் பிரவின், பிருந்தினி ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று 24.05.2022 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1 மணிக்கு யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் இறுதிப் பயணத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அதன்பின் மிருசுவில் புனித நீக்கொலார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-4365)

37/7 மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்

தகவல்- பிள்ளைகள்
நிக்கலின், மாறியோ

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1946.07.20 — இறப்பு 2021.06.03

அமரர்.திரு.
**பொன்னையா சிவஞானசுந்தரம்**

புலவர் சிவா (B.A) (M.A in Tamil)
(திதி:தசமி)

"தாத்தா"
உங்களை நினைக்கும் போது
உங்கள் அன்பின் முன் எழுத்தின்
மூலம் என் உணர்வை
தெரிவிக்க முடியவில்லை...!



பந்தியடி லேன்,
ஆனைக்கோட்டை

குடும்பத்தினர். (11482)

## இராசிபலன்

24.05.2022
வைகாசி 10, செவ்வாய்க்கிழமை
நவமி பிற்பகல் 3.27 மணிவரை

பூரட்டாதி பின்னிரவு 2.40 மணிவரை
சுபநேரம் 10.22-11.52 மணிவரை
இராகுகாலம் 2.52-4.22 மணிவரை

சந்திராஷ்டமம் - ஆயிலியம்

வளவன்




தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.




புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், அரசு வழியில் எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.




உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பர், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், வழிபாடு மகத்துவம் தரும்.




உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்பத்தினரிடையே சில கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு, உடல் நலனில் கவனம் தேவை.




கனவு பலிதமுண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.




எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.




எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.




மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள், நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், செய்தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள், நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.




உறவினர்களின் சந்திப்பால் திடீர் விரயங்கள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள், விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள்.




பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிப்பது நல்லது, வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள்.

உடைந்த உள்ளத்திற்கு உகந்த மருந்து இசையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைக் காலங்களில் ஒலிபெருக்கி பாவனைக்கு தடை

## யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
நாடு பூராகவும் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மக்கள் எந்த விதமான வன்முறைச் சம்பவங்களிலோ எதிர்ப்பு நடவடிக்கையிலோ ஈடுபடாமை மிகவும் வரவேற்கத் தக்க விடயமாகும் என யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உயித் என் லியனகே தெரிவித்தார்.

நேற்று பிராந்திய பொலிஸ் பொறுப்பதிகாரி அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் எவருக்கும் இடையூறு விளைவிக்காத வகையில் பொலிஸ் அதிகாரிகளுடன் முரண்படாமல் அன்றாடச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

எனவே, பொலிஸ் திணைக்களம் என்ற ரீதியில் யாழ்ப்பாண மக்களுக்கு நாங்கள் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம். அத்தோடு யாழ்ப்பாணத்தில் வசிக்கின்ற மூவினங்களைச் சேர்ந்த மக்களுக்கும் மிகுந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்

மேலும் தற்போது க. பொ. த சாதாரண பரீட்சைகள் நேற்று ஆரம்பித்துள்ளது. யாழ் மாவட்டத்தில் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு நாம் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இசை நிகழ்ச்சிகள் மற்றும் ஆலய திருவிழாக்களில் தற்போதைய பரீட்சைக் காலங்களில் ஒலிபெருக்கி பாவனைக்கு தடைவிதித்திருக்கின்றோம்



நிபந்தனைகளுடன் மாத்திரமே சகலருக்கும் ஒலிபெருக்கி அனுமதியினை வழங்குகின்றோம்.

அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்றால் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த முடியும் எனவும் தெரிவித்தார். (நி-6-33)

# 'இளைய தலைமுறை ஆற்றலாளர்' விருது வழங்கு நிகழ்வு

(குப்பிழான்)
தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகனின் 61 ஆவது பிறந்தநாளை முன்னிட்டுக் அற நிதியச் சபையின் ஏற்பாட்டில் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி ஆலய வளாகத்தில் அமைந்துள்ள அன்னபூரணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலாநிதி.ஆறு.திருமுருகனின் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர். சி.சிறிசற்குணராஜா, தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் மருத்துவ நிபுணர். இ.சுரேந்திரகுமாரன் ஆகியோர் வாழ்த்துரைகள் ஆற்றவுள்ளனர். (நி-6-18)



கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான தலைமைத்துவம், மக்கள் தொடர்பாடல் மற்றும் தொடர்பாடல் திறன் விருத்தி ஆகிய விடயங்களை உள்ளடக்கிய பயிற்சிப் பட்டறை நிகழ்வு கடந்த வியாழக்கிழமை காலை கோப்பாய்ப் பிரதேச செயலகப் புதிய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. (படம்-ரவிசாந்)

# கொழுத்தும் வெய்யிலிலும் எரிபொருளுக்கு காத்திருந்த மக்கள்



(குப்பிழான்)
யாழ்.மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக கடந்த சில தினங்களாக மக்கள் இரவு, பகலாக மிக நீண்ட வரிசையில் காத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

அந்தவகையில் நேற்றுத் திங்கட்கிழமை காலை வேளையில் மாத்திரமன்றி மதியவேளையிலும் கொழுத்தும் வெயிலுக்கு மத்தியிலும் யாழ்.மாவட்டத்தின் பல பகுதி எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட வாகனங்களில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளைப் பெறுவதற்காக பல நூற்றுக்கணக்கான மக்கள் காத்திருந்தமையால் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையங்களை அண்டிய வீதிகளில் போக்குவரத்து நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (நி-6-18)

# நுணாவில் பகுதியில் விபத்து ஒருவர் படுகாயம்



(சாவகச்சேரி)
சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தை அண்மித்து நுணாவில் பகுதியில் ஏ9 வீதியில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கொடிகாமம்-யாழ்ப்பாணம் பயணிகள் சேவையில் ஈடுபடும் மினிபஸ்-மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30-33)

# தொழில் கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)
இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் இரண்டாம் கல்வியாண்டிற்கான தொழில் கற்கை நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கடலுணவு தொழில்நுட்ப டிப்ளோமா (NVQ -5),வெளி இணைப்பு இயந்திர பொறிவலர் (NVQ-4), கடலகமாலுமி (NVQ -4) , ஆழ்கடல் சுழியோடி (NVQ -3), உயிர் பாது காப்பு (NVQ -3/4), அலங்கார மீன் வளர்ப்பும் முகாமைத்துவமும் , நீச்சல் பயிற்சி, கடலக வரைபடம், வாசித்தலும் செய்மதி தொடர்பாடலும்(GPS) ஆகிய தொழில் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. க.பொ.த. சாதாரண தரம், க.பொ.த. உயர்தரம் தோற்றியவர்கள் இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 8.6.2022 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

மேலதிக தகவல்களுக்கு 021 738 8188,071 834 9073, 076 293 9888 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிய முடியும் என யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் எஸ்.எஸ். கிருஷ்ணலிங்கம் அறிவித்துள்ளார். (நி-6)

# மஹோற்சவம்

(குப்பிழான்)
இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல்12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்தும் 11 தினங்கள் இடம்பெறவுள்ளது.


இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருமஞ்சத் திருவிழாவும், அடுத்தமாதம் முதலாம் திகதி புதன் கிழமை இரவு சப்பரத் திருவிழாவும், 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை தேர்த்திருவிழாவும், மறுநாள் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (நி-6-18)



யா/மட்டுவில் வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை முன்னாள் அதிபர் சரவணை கிருஷ்ணனின் மணிவிழா கடந்த சனிக்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. (படம்-சிவகுமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்துறை ஆளுமை கொண்ட பண்பாளர் F.X. அன்ரன்



நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் F.X. அன்ரன் அவர்கள் இவ்வுலகை விட்டு ஏகினார் என்ற செய்தி காற்றோடு கலந்த போது அதனை நம்பவும் ஏற்கவும் முடியவில்லை.

ஆம், இனி அவரைச் சந்திக்கவும் அவருடன் கதைக்கவும் முடியாது. அவர் பற்றிய ஆழ் மனப்பதிவுகள் மட்டுமே மனத்திடை வந்தேகும்.

உண்மை. நேற்றிருந்தவர் இன்றில்லை என்ற நிலையாமை தன்னை நிலைநிறுத்திக் கொண்டது.

ஆயினும் அந்த நிலையாமை தரக் கூடிய துன்பம் எத்துணை கொடியது என்று நினைந்த போது கன்னத்தின் ஓரங்கள் நனைந்து கொண்டன.

ஆம், F.X. அன்ரன் அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. அவரின் இழப்பினால் ஏற்படக்கூடிய இடைவெளி இட்டு நிரப்ப முடியாதது.

நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய F.X. அன்ரன் அவர்களின் மனித நேயமும் அறத்தின் வழி நின்று அவர் ஆற்றிய பணியும் ஒரு போதும் மறத்தற்குரியதன்று.

யாருக்கும் தீங்கு நினையாத அவரின் வாழ்வியல்

**உற்றநோய் நோன்றல் உயிர்க் குறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற் குரு**

என்ற வள்ளுவனின் அறத்தை அடையாளப்படுத்தி நிற்கும்.

ஆசிரியர், அதிபர், கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்ற பதவி நிலைகளில் இருந்து சீரிய பணியாற்றிய F.X. அன்ரன் அவர்கள் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் ஒரு பெரும் சொத்து.

எங்கும் எதிலும் ஒரு சுமுகமான நிலையை ஏற்படுத்துவதில் அவர் காட்டிய வகிபாகம் சாதாரணமானதல்ல.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு, வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணக் கல்வி வலயம் என்ற முத்தரப்பு நிர்வாகக் கட்டமைப்பில் F.X. அன்ரன் அவர்கள் ஒரு நேர்மையான இணைப்பாளராகச் செயற்பட்டார்.

அவரின் அந்தப் பணி அவர் மீது உயர்ந்த மரியாதையை அனைவரிடமும் ஏற்படுத்தியது.

இதற்கு மேலாக, தமிழ் இனத்தின் மீது அவர் கொண்டிருந்த பற்றுறுதியை மனித மொழிகளால் கூறிவிட முடியாது.

'அக்கினி' என்ற புனை பெயரில் மிகச் சிறந்த கட்டுரைகளைத் தந்த F.X. அன்ரன் அவர்கள் முரசொலிப் பத்திரிகையில் எழுதி வந்த மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் அவரின் எழுத்துப் புலமைக்குத் தக்க சான்றாகும்.

சிறந்த அரசியல் விமர்சகரான அவர் நாடகத்துறையிலும் தன் கற்பனைத் திறத்தைப் பதிவு செய்தார்.

நேர் கொண்ட பார்வை, நிமிர்ந்த நன்னடை, நிலத்தில் யாருக்கும் அஞ்சாத அமைதியான அறிவு ஞானம், அறத்தின் வழி நின்று ஆற்றும் சேவை, எல்லோரையும் மதிக்கின்ற உயர்ந்த பண்பு என்பன அவரின் அணிகலன்கள்.

இத்தகு சிறப்புமிக்க ஒரு உத்தமப் பண்பாளனை இழந்து விட்ட வேதனையோடு, அவரின் இறுதிப் பயணம் இடம்பெறும் இந்த வேளையில் கல்விச் சமூகம் இரு கரம் கூப்பி அவருக்கு இறுதிப் பிரியாவிடை வழங்கி நிற்கிறது.

**என். விஜயசுந்தரம்**


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா:19 ½ சூரி 10 செவ் 1 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L (லண்டன் கடை)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/7025 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>கி.பா: 22 சூரி 9 செவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Bcom, HNDA (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ:G/9865 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: சூரி 1 செவ் 12 இல்<br>தகைமை/தொழில்: A/L மெக்கானிக், கமம்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/7027 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 22 ½ சூரி 5 செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ:G/9867 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: சூரி 10 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/7066 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: சூரி 10 செவ் 9 இல் உயரம் : 5'3"<br>தகைமை/தொழில்: Bio Medical Engineer (அமெரிக்கா)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அமெரிக்கா மட்டும்<br>தொ.இ:G/9881 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம் 4<br>கி.பா: 13 சூரி 4 செவ் 6 இல் உயரம்:5'5'<br>தகைமை/தொழில்: பட்டதாரி நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளா<br>எதிர்பார்ப்பு: உள்நாடுமட்டும் அரசதொழில் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/7094 | பிறப்பு: 2000 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: சூரி 11 செவ் 12 இல் உயரம்:156 cm<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/9885 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் [illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


## ஆயுட்காலத்தை அதிகரிக்கும் 25 அத்தியாவசிய மருந்துகள்

# நாட்டில் இல்லை

(கொழும்பு)

நோயாளிகளுக்கான சுமார் 300 அத்தியாவசிய மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


மேலும் ஆயுட்காலத்தை நேரடியாக பாதிக்கும் 25 அத்தியாவசிய மருந்துகள் எந்தவொரு அரச மருத்துவமனைகளிலும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தீவிர இதய நோய்க்கான மருந்துகள், புற்றுநோயாளிகளுக்கான மருந்துகள், நீரிழிவு நோய்க்கான தடுப்பூசிகளான இன்சுலின் போன்றவையே இவ்வாறு அரச மருத்துவமனைகளில் இல்லை என கூறப்படுகிறது.

இந்த 25 மருந்துகளுக்கும் தனியார் துறை மருந்தகங்களிலும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

டொலர் தட்டுப்பாடு மட்டுமின்றி, தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியின் திறமையின்மை மற்றும் மோசமான நிர்வாகமும் இந்த நிலைக்கு முக்கிய காரணம் என சுகாதார அமைச்சக வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# அலகாசிங்-சஜித் சந்திப்பு



(கொழும்பு)

உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி அலகா சிங், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்று கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கையின் சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்கு முன்பை விட வலுவான ஆதரவை வழங்குமாறு இதன் போது எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துப் பொருள்களின் தட்டுப்பாடு தொடர்பில் இச்சந்திப்பின் போது விசேட கவனம் செலுத்தப்பட்டது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 53

# புத்தகங்கள் கற்றுத்தந்த நேசம்



புத்தகங்களை விற்று நிறையப் பணம் சம்பாதிக்கவில்லை. ஆனால், நிறைய மனிதர்களைச் சம்பாதித்திருக்கிறேன். அது போதும் எனக்கு என, ஒரு வீதியோரப் புத்தக வணிகர் என்னிடம் சொன்னார். அனுபவம் பேசுகிறது என்று அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தேன்

"ஆசைப்பட்ட புத்தகங்களை எல்லோராலும் வாங்க முடிவதில்லை.

எனக்குத் தெரிந்த ஒரு போட்டோ கிராபர், வெளிநாட்டுப் புகைப்படப் புத்தகங்களின் விலை கேட்டுவிட்டு நீண்ட நேரம் புரட்டிக்கொண்டே இருப்பார். ஆயிரம், இரண்டாயிரம் விலை கொடுத்து அவரால் வாங்க முடியாது எனத் தெரியும் என்பதால், நானும் கண்டு கொள்வது இல்லை. தனக்கு விருப்பமான புகைப்படங்களை ஆசை ஆசையாகப் புரட்டிப் பார்த்துவிட்டு, பெருமூச்சுடன் வைத்து விட்டுப் போய் விடுவார். ஒருமுறை பெரிய போட்டோகிராபி புத்தகம் ஒன்றை என்னிடம் எடுத்துக் கொடுத்து, இதை யாருக்கும் விற்று விடாதீர்கள், பணம் ரெடி பண்ணிட்டு வந்து ஐந்தாம் திகதிக்குப் பிறகு வாங்கிக்கொள்கிறேன் என்றார்.

அந்தப் புத்தகத்தை அவருக்காகத் தனியே எடுத்து வைத்திருந்தேன். சொன்னபடி ஐந்தாம் திகதி அந்தப் போட்டோகிராபர் வரவில்லை. ஒருநாள் ஓவியர் ஒருவர் வந்து கேட்கவே, அந்தப் புத்தகத்தை விற்று விட்டேன். இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஒருநாள் மாலை அந்தப் போட்டோகிராபர் பரபரப்புடன் வந்து, நான் எடுத்து வைத்த புத்தகத்தை வாங்குகிறேன் எனப் பணத்தை நீட்டினார்.

அதை எப்பவோ விற்று விட்டேனே என்று சொன்னதும், அவருக்கு முகம் வெளிறிப் போய் விட்டது. விற்று விட்டீங்களா! என்னங்க இப்படிப் பண்ணீட்டீங்க? அதான் நான் வாங்குகிறேன் என்று சொன்னேன் எனக் கோபப்பட்டுக் கத்தினார்.

நீங்க என்ன செய்வீங்களோ தெரியாது. எனக்கு அந்தப் புத்தகம் இப்போ வேணும்.

அது போலப் போட்டோகிராபி புத்தகம் வந்தால் எடுத்து வைக்கிறேன் எனச் சொன்னதை அவர் ஏற்றுக்கொள்ளவே இல்லை.

யார் வாங்கியது என்று சொல்லுங்க. அவர் வீட்டுக்குப் போய் நான் கேட்டுப் பார்க்கிறேன் என்றார். அடிக்கடி வாற ஓவியர்தான். ஆனால், அவர் விலாசம் எல்லாம் தெரியாதே என்றதும் அவரது முகம் இன்னும் வாடி விட்டது.

இந்தப் பணத்தை நான் ரெடி பண்றதுக்குப்பட்ட கஷ்டம் எனக்குத்தான் தெரியும்.

இத்தனை வருஷப் புத்தக விற்பனையில் அன்று மட்டும்தான் தான் தவறு செய்து விட்டதாக மனதில் ஓர் உணர்ச்சி உருவானது. எப்படியாவது அந்தப் புத்தகத்தைத் திரும்ப வாங்கித் தந்துவிட வேண்டும் எனக் காத்துக்கொண்டிருந்தேன்.

நாலைந்து நாட்களுக்குப் பிறகு அந்த ஓவியர் வந்தார். அவரிடம் நடந்ததைச் சொல்லி அந்தப் புத்தகத்தை திருப்பித் தாருங்கோ என்று கேட்டேன். அவர் மனம் இரங்கி மறுநாளே அந்தப் புத்தகத்தைக் கொண்டு வந்து தந்ததோடு, பணம் வேண்டாம் என்று சொல்லிப் போய்விட்டார்.

போட்டோகிராபரிடம் அந்தப் புத்தகத்தைக் கொடுத்த போது, கையில் வாங்கிக் கொண்டு சிரித்த முகத்தோடு, ரொம்ப நன்றீங்க, என்னால் நம்பவே முடியலை என்று சொல்லி, என் இரு கைகளையும் பற்றிக் கொண்டார்.

"நீங்க நன்றி சொல்ல வேண்டியது எனக்கில்லை. இந்தப் புத்தகத்தை இலவசமாகவே திருப்பிக்கொண்டு வந்து கொடுத்த ஓவியருக்குத்தான்" என்று சொல்லி வாங்கியிருந்த பணத்தைப் போட்டோகிராபரிடம் திருப்பிக் கொடுத்தபோது இரட்டைச் சந்தோசத்தில் அவர் "நிஜமாவா? நிஜமாவா?" எனக் கேட்டுக் கொண்டே இருந்தார்.

பிறகு சந்தோசத்தில் தனது கமராவால் என்னைக் கடையோடு சேர்த்து, ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டார். "இத்தனை வருஷ அனுபவத்தில் அதுதான் முதன் முறையாக நான் கடையோட சேர்த்து போட்டோ எடுத்துக்கிட்டது. இதைவிட வேற என்ன சந்தோசம் தம்பி இருக்கு. அதான் சொன்னேன் நிறைய மனிதர்களைச் சம்பாதித்திருக்கிறேன்" என்றார் பழைய புத்தகக் கடைக்காரர்.

எவ்வளவு பெரிய மனசு! எத்தனை அன்பு! என அந்த ஓவியரையும் புத்தகக் கடைக்காரரையும் வியந்தபடியே சொன்னேன்.

இந்த நேசத்தைத்தான் புத்தகங்கள் உலகுக்குக் கற்றுத் தருகின்றன. புத்தகங்களை நேசிக்கிறவருக்குத் தன்னைப் போலப் புத்தகம் படிக்க ஆசைப்படுகிற மற்றவருடைய மனசு நிச்சயம் புரியும் என்றேன். அவர் அதை ஆமோதித்துத் தலையாட்டினார்.

அவ்வளவு ஆசைப்பட்டு போட்டோகிராபர் தேடி வாங்கிய புத்தகம் எது தெரியுமா? உலகப் புகழ்பெற்ற புகைப்படக் கலைஞர் அன்சல் ஆடம்ஸின் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் போ

# உலகை அச்சு

## உலக சுக

(ஜெனிவா)

**கொவிட் பெருந்தொற்று நோய், உக்
தொற்று நோய் என உலகம் தற்போ
வருவதாக உலக சுகாதார அமைப்பி
எச்சரித்துள்ளார்.**

ஜெனிவாவில் உள்ள உலக சுகாதார அமைப்பின் தலைமையகத்தில் வைத்து நேற்று முன்தினம் கருத்து வெளியிட்ட அவர், ஆபிரிக்காவிற்கு வெளியே 15 நாடுகளில் குரங்கம்மை நோய் தொற்று பரவியுள்ளதை ஐ.நா.சுகாதார அமைப்பின் நிபுணர்கள் கண்டறிந்துள்ளதாக தெரிவித்தார்.

ஐரோப்பா, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா மற்றும் இஸ்

# ஒரு அங்குலம் விட்டுக்கொடுத்தாலும் மேற்கத்தேய நாடுகளுக்கு விழும் அடியாக அமையும்

## போலந்து ஜனாதிபதி

(போலந்து)

உக்ரைனின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் உரிமை உக்ரைனுக்கு மட்டுமே உண்டு என அந்நாட்டு ஜனாதிபதி ஆண்ட்ர்செஜ் துடா தெரிவித்துள்ளார்.

உக்ரைன் - ரஷ்யாவிற்கு இடையிலான போர் தொடர்ந்து வருகிறது.

# குவாட் உச்சி மாநாட்டில் பங்கேற்க டோக்கியோ சென்றடைந்தார் மோடி



(டோக்கியோ)

குவாட் உச்சி மாநாட்டில் பங்கேற்க ஜப்பான் புறப்பட்டுச் சென்ற பிரதமர் மோடி நேற்று அதிகாலை தலைநகர் டோக்கியோ சென்றடைந்தார். தூதரக அதிகாரிகள் உட்பட பலர் பிரதமர் மோடியை உற்சாகமாக வரவேற்றனர்.

டோக்கியோ சென்றுள்ள பிரதமர் மோடி இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ள குவாட் அமைப்பின் உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார்.

இந்தோ-பசுபிக் மற்றும் பரஸ்பர நலன் தொடர்பான உலகளாவிய பிரச்சினைகள் குறித்த கருத்துக்களை பரிமாறிக்கொள்ள குவாட் மாநாடு வாய்ப்பளிக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பான் பயணத்தின்போது அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை சந்தித்து இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவது குறித்து ஆலோசிக்க உள்ளதாகவும் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். (நி)

## வெளிநாடு

# ார், கோவிட், குரங்கம்மை என
# சுறுத்தும் மும்முனை சவால்கள்
## காதார அமைப்பு எச்சரிக்கை

**உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் மற்றும் குரங்கம்மை**
**போது பல வலிமையான சவால்களை எதிர்கொண்டு**
**ப்பின் தலைவர் டெட்ரோறஸ் அதானோம் கெப்ரேயஸ்**



ரேலில் 80 இற்கும் மேற்பட்ட குரங்கம்மை தொற்று நோயாளிகள் உறுதி செய்யப்பட்டுள்ளனர்.

எனினும் குரங்கம்மை தொற்றால் பொதுமக்களுக்கு பாரிய ஆபத்துக்கள் இதுவரை இல்லை என்பது உணரப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

குரங்கம்மை மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்காவின் தொலைதூர பகுதிகளில் மிகவும் பொதுவாக பரவும் வைரஸாகும். இந்த வைரஸ் மக்களிடையே எளிதில் பரவாது. அத்துடன், அதன் பாதிப்புகளும் இலேசானது எனவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே குரங்கம்மை நோய்க்கான தடுப்பூசி எதுவும் இதுவரை இல்லை. ஆனால் பெரியம்மை நோய்க்கு வழங்கப்படும் தடுப்பூசி 85% பாதுகாப்பை வழங்குகிறது.

ஏனெனில் இரண்டு வைரஸ்களும் பெரும்பாலும் ஒத்தவை என சுகாதார நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். (நி)

இந்த சந்தர்ப்பத்தில் ஆண்ட்ர்செஜ் துடா உக்ரைனிற்கு விஜயம் செய்துள்ளார்.

இதன்போது கீவ் நகரில் உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கியை சந்தித்து கலந்துரையாடியிருந்ததுடன், உக்ரைன் பாராளுமன்றத்திலும் அவர் உரையாற்றியுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதிக்கு உக்ரைன் அடிபணிய வேண்டும் என்று கவலைக் குரல்கள் கூறுகின்றன. ஆனால் அந்த குரல்களுக்கு உக்ரைன் செவிசாய்க்கக்கூடாது.

ஏனென்றால் உக்ரைனின் ஒரு அங்குல நிலத்தை விட்டுக் கொடுத்தாலும் அது ஒட்டு மொத்த மேற்கத்தேய நாடுகளுக்கு விழுகிற அடியாக அமையும் என எச்சரிக்கை விடுத்துள்ளார். (நி)

## உக்ரைன் கலாசார அரண்மனையை ஏவுகணை மூலம் தாக்கி அழித்தது ரஷ்யா

(கீவ்)

உக்ரைன் தலைநகர் கார்கிவ் நகரில் உள்ள கலாசார அரண்மனையை ரஷ்ய இராணுவம் ஏவுகணை மூலம் தாக்கி அழித்தமை அனைவரையும் அச்சத்தில் உறைய வைத்துள்ளது.

கார்கிவ் நகரின் லோசோவா பகுதியில் உள்ள கலாசார அரண்மனையே தாக்குதலுக்கு இலக்காகி அழிந்தது.

இந்தத் தாக்குதலில் குழந்தை உட்பட பொதுமக்கள் 7 பேர் வரை படுகாயமடைந்து இருப்பதாக உக்ரைன் பாதுகாப்பு அமைச்சகம் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது.



அத்துடன் இன்று உக்ரைனுக்கு விமானப் படையே தேவை என்ற கருத்தையும் உக்ரைன் பாதுகாப்பு அமைச்சகம் அந்த டுவிட்டர் பதிவின் மூலம் தெரிவித்துள்ளது. (நி)


### ஜோ பைடன் உள்ளிட்ட
## 963 அமெரிக்கர்களுக்கு தடை விதித்தது ரஷ்யா

(மொஸ்கோ)

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உள்ளிட்ட 963 அமெரிக்கர்கள் ரஷ்யாவுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சின் இணையத்தள பக்கத்தில் தடை விதிக்கப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

உக்ரைன் போரைத் தொடர்ந்து அமெரிக்கா எடுத்த விரோதமான நடவடிக்கைகள் அந்நாட்டுக்கு எதிராகவே திரும்பியுள்ளதாகவும் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி)



## 16 நாடுகளுக்கு தடை விதித்தது சவுதி அரேபியா

(கட்டார்)

16 நாடுகளுக்குச் செல்ல சவுதி அரேபியா தடை விதித்துள்ளது. கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதி முதல் உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவி வருகிறது.

பெரும்பாலான நாடுகளில் தடுப்பூசி அறிமுகத்திற்கு வந்த பிறகு கொரோனா கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளது.

இருப்பினும் ஒரு சில நாடுகளில் மட்டும் கொரோனாத் தாக்கம் மீண்டும் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் சவுதி அரேபியாவில் தற்போது மீண்டும் கொரோனா பரவல் அதிகரிக்க தொடங்கியுள்ளது. தினசரி தொற்று விகிதம் கடந்த சில வாரங்களாக உயர்ந்து வருகிறது.

இதையடுத்து சவுதி அரேபிய மக்கள் 16 நாடுகளுக்கு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்தியா, பைனான், சிரியா, துருக்கி, ஈரான், ஆப்கானிஸ்தான், ஏமன், சோமாலியா, எதியோப்பியா, கொங்கோ குடியரசு, லிபியா, இந்தோனேசியா, வியட்நாம், ஆர்மேனியா, பெலாரஸ், வெனிசுலா ஆகிய நாடுகளுக்கு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் இந்தியாவில் இருந்து சவுதி செல்லும் மக்களுக்கு எந்தக் கட்டுப்பாடுகளும் இதுவரை விதிக்கப்படவில்லை.

மேலும் உலக நாடுகளில் பரவி வரும் குரங்கம்மை வைரஸ் குறித்து கண்காணித்து வருவதாகவும் சவுதி அரசு தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுக்காக அலையும் நாள் வெகு தொலைவில் இல்லை

## வவுனியா விவசாய சம்மேளனம்

(வவுனியா)

**நாடு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கின்றது. இன்று எரிபொருளுக்காக ஓடிக்கொண்டிருக்கும் மக்கள் எதிர்காலத்தில் உணவுக்காக அலையப்போகும் அவலநிலை காணப்படுகின்றது.**

தற்போதைய நெருக்கடியை போக்குவதற்கு விவசாயத்தை வலுப்படுத்தி உற்பத்தியை பெருக்கும் மூலோபாயம் தொடர்பாக அரசு சிந்திக்க வேண்டும் என வவுனியா மாவட்ட விவசாய சம்மேளனத்தினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக வவுனியா ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அரசாங்கங்கள் செய்த தவறால் நாட்டில் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. எமது நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய உருளைக்கிழங்கு, வெங்காயம் போன்றவற்றையே இன்று இறக்குமதி செய்யும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

பொருளாதார பிரச்சனையை தீர்ப்பதற்கு வெளிநாடுகளிடம் கடன் வாங்குகின்றார்களே தவிர விவசாயத்தை வலுப்படுத்தி உள்ளூர் உற்பத்தியை பெருக்குவதற்கான வழிகாட்டல்களை யாரும் முன்னெடுக்கவில்லை.

எனவே எமக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்குங்கள். விவசாயிகளான நாங்கள் தோட்டச் செய்கைக்கான எரிபொருள் இல்லாமல் அல்லல்படுகின்றோம். எனவே எமக்கான மண்ணெண்ணை மற்றும் டீசலை தந்துதவுமாறு நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம்.

வவுனியாவை பொறுத்தவரை எரிபொருளில் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலமே பயிர்ச்செய்கை செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனால் நாம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளோம். இந்த நாட்டுக்காக பெருமளவு மரக்கறிகளை உற்பத்தி செய்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

இங்கு 9 கமநலசேவை நிலையங்கள் இருக்கின்றது. எனவே அவற்றிற்கு நேரடியாக எரிபொருளை வழங்குவதற்கான பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதனூடாக ஒவ்வொரு விவசாயிகளுக்கும் தேவையான எரிபொருளை இலகுவில் நாங்களே விநியோகிப்போம். அதன் மூலம் விவசாயிகள் அலைந்து திரியும் நிலையை நிவர்த்தி செய்ய முடியும். எனவே எமக்கு இதனை செய்து தாருங்கள் நாம் முன்னுதாரணமாக அதனை செய்து காட்டுகின்றோம் என அவர்கள் தெரிவித்தனர். (நி-6-299)

# மன்னார் மாவட்ட மருத்துவமனைக்கு மருந்துப் பொருட்களை வழங்கியது மெசிடோ நிறுவனம்



(மன்னார்)

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு தேவையான ஒரு தொகுதி மருந்துப் பொருட்களை மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவன த்தினர் நேற்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதனிடம் ஙகயளித்தனர்.

இதன் போது, 2 ஆயிரம் குழுக்கோ மீற்றர் ஸ்ரிப்ஸ், 400 சத்திரசிகிச்சை மயக்க ஊசி மருந்துகள் உட்பட சுமார் 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மருந்துகள் என்பன வழங்கி வைக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மருத்துவமனைகளில் மருந்துப்பொருட்கள் உள்ளடங்களான மருத்துவ உபகரணங்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள குறித்த மருந்து மற்றும் மருத்துவ பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப் பாட்டை நிவர்த்தி செய்ய பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் மன்னார் மெசிடோ நிறுவனத்திடம் முன் வைத்த கோரிக்கைக்கு அமைவாக குறித்த மருந்துப் பொருட்கள் கையளிக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6-285)



மன்னாரில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை தொடக்கம் எரிபொருள் நிரப்புவதற்கும் எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்கும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். (படம் : ஜோசப்நயன்)

# தமிழ்நாட்டு உறவுகளின் உதவிகளை மறக்க முடியாது

## செல்வம் எம்.பி



(மன்னார்)

தமிழ்நாட்டு உறவுகள் இலங்கை மக்களுக்கு மிக உற்சாகமான முறையில் தங்களுடைய உறவுகள் பட்டினி கிடக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு அத்தியாவசியப் பொருட்களை அனுப்பி வைத்திருந்தார்கள். இந்த செயற்பாட்டுக்காக தமிழ்நாட்டு மக்களுக்கும் தமிழ்நாட்டு முதலமைச்சர் தமிழ்நாட்டின் சட்டசபை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின், போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தமிழ்நாட்டு உறவுகள் இலங்கை மக்களுக்கு மிக உற்சாகமான முறையில் தங்களுடைய உறவுகள் பட்டினி கிடக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு அரிசி, பால் மா, மருந்து பொருட்கள் அனுப்பி வைத்திருந்தார்கள்.

அதேபோல் அகதி முகாம்களில் இருக்கும் எங்களுடைய மக்களை இன்றும் தமிழ்நாட்டு மக்கள் பாதுகாத்துக் கொண்டிருக்கும் அந்த செயற்பாடுகளையும் எங்களால் ஒருபோதும் மறக்க முடியாது.

அத்துடன் வன்னி மாவட்டத்தில் குறிப்பாக கடல் தொழிலாளர்கள் விவசாயிகளுக்குத் தேவையான எரிபொருள் பிரச்சனை பாரிய பிரச்சினையாக இருக்கிறது. மண்ணெண்ணெய் இல்லாத சூழலில் அவர்களுடைய தொழில் பாதிக்கப்படுகிறது. அவற்றை சீர் செய்யுமாறு ஏற்கனவே பாராளுமன்றத்தில் கோரிக்கை வைத்திருக்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-285)

# தமிழ் அரசியல் வாதிகளையும் கர்மா விடாது

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்




(வவுனியா)

கர்மா தமிழ் அரசியல்வாதிகளையும் விடாது என்று வவுனியாவில் தொடர்போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர்ச்சியான போராட்டம் நேற்றுடன் 1919 நாளை எட்டுகின்றது.

இதனையொட்டி நேற்று இடம்பெற்ற ஆர்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில்,

வடகிழக்கில் இராணுவத்தை அகற்றுமாறு சர்வதேச நாணயநிதியம் நிபந்தனைகளை விதித்தது. இலங்கை பொருளாதாரத்தின் 15 வீத செலவீனம் இதுவாகும், இது தமிழ் மக்களின் பிரதான கோரிக்கை. மக்கள் பிரதிநிதிகள் சிவில் அமைப்புகள் இந்த கோரிக்கையை வலுப்படுத்த வேண்டும்.

ஐ.நா. கூட்டத்தொடருக்கு முன்பு இலங்கைக்கு உதவிகள் வழங்கும் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளிடம் வலுவான கோரிக்கைகளை தமிழ் அரசியல்வாதிகள் சிவில் அமைப்புக்கள் முன்வைக்க வேண்டும். இல்லாவிடில் கர்மா அனைவரையும் பாதிக்கும் என அவர்கள் தெரிவித்தனர். (நி-6-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோலில் கலப்படம் மக்களே அவதானம்

## எரிசக்தி அமைச்சர் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**மூன்றாம் தரப்பினரிடம் பெற்றோல் வாங்க வேண்டாம் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**



மக்கள் எரிபொருளைச் சேர்ப்பதும், பெற்றோலியப் பொருட்களை மற்ற திரவங்களுடன் கலந்து அதிக விலைக்கு விற்பனை செய்வதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அதனால் மூன்றாம் தரப்பிடம் பெற்றோல் வாங்க வேண்டாம் இவ்வாறான முயற்சி களை ஊக்குவிக்க வேண்டாம் எனவும் அது தொடர்பில் தெரிவிக்குமாறும் அமைச்சர் காஞ்சன விஜே சேகர பொது மக்களிடம் கேட் டுக் கொண்டுள்ளார். (நி)

# பெருமளவு எரிவாயு சிலிண்டர்களை பதுக்கி வைத்திருந்தவர் கைது



(கொழும்பு)

இலங்கையில் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக நாளாந்தம் வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் கொலன்னாவை பிரதேசத்தில் பேக்கரியொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 40 எரிவாயு சிலிண்டர்களை கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கைப்பற்றியுள்ளது.

வர்த்தகர் சந்தையில் நிலவும் விலையை விட இரட்டிப்பான விலைக்கு எரிவாயு சிலிண்டர்களை விற்பனை செய்திருப்பது தெரியவந்துள்ளது. (நி)

# 'தற்போதைய அரசும் மக்களை வதைக்கின்றது' கொட்டகலையில் போராட்டம்



(ஹற்றன்)

மண்ணெண்ணெய் வழங்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியும் கொட்டகலை எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக, மக்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியை மறித்து முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டத்தால் கடும்வாகன நெரிசலும்ஏற்பட்டது.

மண்ணெண்ணெய் வைத்துக்கொண்டுதான், இப்படி அநீதி செய்கின்றனர், தற்போதைய அரசும் மக்களை வதைக்கின்றது. இப்படியான அரசு தேவையில்லை என மக்கள் தமது உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தினர். (நி)

# எந்தவொரு அமைச்சுப் பதவியையும் நான் ஏற்கப் போவதில்லை



(கொழும்பு)

எந்தவொரு அமைச்சு பதவியையும் ஏற்கப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

எரிசக்தி அமைச்சர்பதவியை ஏற்பதற்கு சம்பிக்கரணவக்க தயார் என்றால் அவருக்கு ஆதரவளிக்க தயார் என அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்திருந்தார்.

அந்த அமைச்சிற்கு தலைமை தாங்குவதற்கு சம்பிக்க ரணவக்கவே பொருத்தமானவர் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், எந்தவொரு அமைச்சு பதவியையும் ஏற்கப் போவதில்லை என சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். நாட்டின் பொருளாதாரத்திற்கு சாதகமான அரசாங்கத்தின் எந்தக் கொள்கையையும்வெளிப்படையாக ஆதரிக்கத் தயார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் சாதகமான அரசியல் மாற்றங்களை ஐக்கிய மக்கள் சக்தி ஆதரிக்கும் எனவும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (நி)

## தென்னகோனை இடமாற்ற உத்தரவு

(கொழும்பு)

மேல் மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை இடமாற்றம் செய்யுமாறு சட்டமா அதிபர் பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மே 9 ஆம் திகதி இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (நி)

# கப்ராலுக்கு விதிக்கப்பட்ட பயணத்தடை நீடிப்பு

(கொழும்பு)

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடை நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று வரை விதிக்கப்பட்ட தடையை ஜூலை மாதம் 25 வரை நீடித்து கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டது.

அமைச்சரவையின் அல்லது நிதிச்சபையின் அனுமதியின்றி இமாத் ஷா சுபைரிக்கு 6.5 மில்லியன் டொலர்களை செலுத்தியதன் மூலம், கப்ரால் குற்றத்தை புரிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2022 ஜனவரி 18ஆம் திகதி செலுத்த வேண்டிய முறிப்பத்திரங்கள் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கு 500 மில்லியன் டொலர் நஷ்டத்தை ஏற்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# பொருளாதார நெருக்கடி இரு குழந்தைகள் உயிரைப் பறித்தது

## குற்ற உணர்வு இருந்தால் ஜனாதிபதி உடனடியாக பதவி விலக வேண்டும்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக பதவி விலக வேண்டும் என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தன தெரிவித்துள்ளார்.



இந்த விடயம் தொடர்பாக அவர் தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

பெற்றோல் மற்றும் மருந்து பற்றாக்குறையினால் இரண்டு குழந்தைகள் உயிரிழந்தமை தொடர்பாக மருத்துவர் ஒருவரின் பதிவிற்கு மஹேல கருத்துத் தெரிவித்துள்ளார்.

குறித்த பதிவில், "இதை படித்துவிட்டு கோட்டாபய ராஜபக்ஷ குற்ற உணர்வுடன் இருந்தால் உடனடியாக பதவி விலக வேண்டும். இந்த நிலைக்கு அவரே நேரடிப் பொறுப்பு. அத்தோடு, இந்த நிர்வாகத்தின் ஒரு பகுதியாக இருந்த அனைவருமே இதற்கு பொறுப்பு கூற வேண்டும்" எனப் பதிவிட்டுள்ளார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 320 | 220 | 300 | 320 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 220 | 220 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 300 | 300 |
| தக்காளி | 900 | 1000 | 800 | 1000 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 150 | 120 |
| கோவா | 260 | 220 | 240 | 250 |
| கரட் | 180 | 350 | 400 | 400 |
| பூசணி | 150 | 100 | 100 | 120 |
| புடோல் | 160 | 240 | 240 | 280 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 400 | 380 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 150 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 600 | 700 | 800 | 600 |
| வெண்டக்காய் | 200 | 160 | 160 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 140 | 200 |
| பயற்றங்காய் | 600 | 400 | 400 | 240 |
| லீக்ஸ் | 200 | 240 | 240 | 250 |
| பீற்றூட் | 350 | 400 | — | 400 |
| கறிமிளகாய் | 480 | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 1200 | 1800 | 1200 | 1200 |
| போஞ்சி | 450 | 650 | — | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 160 | — | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 150 | 140 |
| தேசிக்காய் | 600 | 500 | 500 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 70-80 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 200 | 180 | 150 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 120 | 180 | — | 280 |
| பொன்னாங்கண்ணி | 60 | 70 | 100 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | — | — | — | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## வேண்டவே வேண்டாம்!



(நேற்றைய தொடர்ச்சி)

வேலுவும் தன் திட்டத்தைக் கூறினான். லட்சுமியும் "நீ சொன்னபடியே செய்கிறேன். இனிமேல் இந்தத் தொல்லையே இராது" என்று கூறி மகிழ்ந்தாள். வேலு திரும்பிப் போய் மங்களத்திடம் அன்று மாலைக்குள் வெல்லச் சீடை தயாராகாது என்று கூறவே மாப்பிள்ளை மகாலிங்கம் பயணத்தைத் தள்ளிப் போட்டான். அன்று மாலை மகாலிங்கம் வீட்டின் பின் புறமுள்ள மாமரத்தின் கீழ் உட்கார்ந்திருந்தான்.

அப்போது வேலு அவனை அணுகி "ஐயா! லட்சுமி நமக்கு நாளை தான் வெல்லச் சீடை செய்து கொடுக்க முடியும் என்று சொன்னாலும் இன்று தன் அக்காவின் குழந்தைகளுக்காக அசல் நெய்யில் வெல்லச் சீடைகளைச் செய்து வைத்திருக்கிறாள். அவற்றை குழந்தைகள் தின்று கொண்டிருந்ததைப் பார்த்தேன், அடடா! என்ன வாசனை! அப்போது என் நாக்கில் நீர் ஊறியது. பார்த்தாலே சாப்பிடு சாப்பிடு என்கிறது" என்று சப்பை கொட்டிக் கொண்டு கூறினான்.

அதைக் கேட்ட மகாலிங்கம் "அப்படியா! அந்தச் சீடைகள் எனக்குக் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்" என்று பெருமூச்சு விட்டவாறே கூறினான். வேலுவும் "நாம் லட்சுமியின் வீட்டிற்குப் போகலாம். குழந்தைகள் நிறையச் சாப்பிட்டு விடுவார்கள் என்று எண்ணி அவள் சீடைகளை ஜாடியில் போட்டு பரண் மீது வைத்ததை நான் பார்த்தேன். இருட்டியதும் நாம் போய் அந்த ஜாடியிலிருந்து கொஞ்சம் எடுத்துக் கொண்டு வந்து விடலாம்" என்றான்.

மகாலிங்கமும் "அது எப்படி முடியும்?" என்று கேட்கவே வேலுவும் இதுவரை உங்கள் மாமியார் இந்த லட்சுமிக்கு வெல்லச் சீடை செய்து கொடுத்ததற்கு என்று ஒரு பைசா கூடக் கொடுக்கவில்லை. நாளை அவள் செய்து கொடுக்கும் சீடைகளுக்கு நீங்கள் முப்பது ரூபாய் கொடுக்கும் சாக்கில் அங்கே நாம் போகலாம். மற்றதை நான் கவனித் துக் கொள்கிறேன் என்றான்.


மகாலிங்கம் இதற்கு ஒருவாறு இசைந்து வேலுவுடன் கிளம்பிச் சென்றான். லட்சுமியின் வீட்டை அவர்கள் அடைந்த போது லட்சுமி "மாப்பிள்ளை ஐயா வந்திருக்கிறாரே என்ன விசேஷம்?" என்று ஆச்சரியப்பட்டவள் போலக் கேட்டாள்.

மகாலிங்கமும் "நீ சீடை செய்வதற்காக முப்பது ரூபாய் கொடுத்துப் போகு வந்தேன்" என்று கூறிப் பணத்தைக் கொடுத்தான்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## சுந்தர காண்டம்




**அனுமன் கடலைக் கடத்தல்**

கடலைக் கடப்பதற்கு அனுமன் தன் உடம்பைப் பெருக்க வேண்டுவதாயிற்று. மண்ணும் விண்ணும் நிறைந்த பேருருவம் எடுத்தான். அவன் தலை விண்ணை முட்டியது; அங்கே மண்ணவர் வியக்கும் துறக்க நாடு இருந்தது; சீதை அங்கு வாழ விரும்புபவள் அல்லள்; அதனால், அங்கு இருக்க அவளுக்கு வாய்ப்பில்லை என்பதை உணர்ந்தான்.

அவன் ஏறி நின்றது மகேந்திர மலை; விண்ணை முட்டும் அம்மலையில் இருந்த அவனுக்குப் பொன்னை நிகர்த்த இலங்கை கண்ணில் பட்டது. "செல்லும் இடம் அது தான் என்ற தெளிவு ஏற்பட்டது. அதனால், எல்லையில்லா மகிழ்ச்சி அவனைத் தழுவியது. அங்கிருந்து அவன் இலங்கை நோக்கிப் பாய்ந்தான்; கால்களை அழுத்தமாக அம்மலையில் ஊன்றினான்; வானரனாக இருந்த வன் வானவர் போல் அந்தரத்தில் பறந்தான், பறவை போலத் தன்னை மாற்றிக் கொண்டான்; வாலை உயர்த்தினான்; கால்களை மடக்கினான்; கழுத்தை உள் அடக்கினான்; காற்றிலும் வேகமாகத் தன் ஆற்றல் தோன்ற விண்ணில் பறந்தான். அவன் செல்லும் வேகத்தால் கல்லும் முள்ளும் மரமும் செடியும் கொடியும் அவனுடன் தோழமை கொண்டன; உடன் பயணம் செய்தன.

கடல் நீரைப் பார்த்தான்; அதன் அடியைக் கண்டான்; நாகர உலகம் ஒளிவிட்டது; கடல் மீன்கள் அவனால் எழுந்த காற்றால் துடித்து இறந்தன; யானைகள் எட்டும் திக்கு திசை தடுமாறி நிலை குலைந்தன; அண்டங்கள் நடுங்கின; அண்டர் வியந்தனர்.

**மலை குறுக்கிட்டது**

விண்ணில் பறந்த போது எதுவும் கண்ணில் படவில்லை; கொண்ட கொள்கை அண்ட முகட்டைத் தாவ உதவியது.

கடலிலிருந்து மலை ஒன்று முளைத்தது; அது கண்டு அவன் மலைத்துப் போனான்; அவனோடு போட்டி போட்டுக் கொண்டு அஃது உயர உயர நிமிர்ந்தது; இவன் கால் பட்டு அதன் தலை சிதறியது; அது தலை கீழாய் உருண்டது; அசுரன் தலையில் கால் வைக்கும் காளிபோல் அதன் மீது நின்று, காளி நர்த்தனம் ஆடினான்; அது தன் உச்சியை அடக்கிக் கொண்டது; மானுட வடிவம் கொண்டு அவனிடம் வந்து மண்டியிட்டது. அதனை அண்ட ஒட்டாமல் அவன் அகலச் சொன்றான். "நீ யார்? ஏன் தொடர்கின்றாய்?" என்று வின வினான். "நன்றி உடையேன்; அதனால், உன்னை நயக்கின்றேன்" என்றது.

"வெற்றியுடைய செய்தி இருந்தால் சொல்; வேகமாகப் போக வேண்டும்" என்றான். "மைந்நாகம் என்பது என் பெயர்; சிறகுகள் பெற்றிருந்தேன்; என் சிறகுகளை அறுக்க இந்திரன் என்னைத் தொடர்ந்தான்; நான் வேகமாய்ப் பறந்து செல்ல உன் தந்தை உதவினான்" என்றது.

காற்றில் மிதக்கும் கவிதையாய் இருந்தது அந்த சொற்கள் அவனுக்கு. "நான் காற்றுக்குச் செய்யும் வந்தனை இது; நீ அதன் மைந்தன், இங்கு இருந்து உண்டு களைப் பாறிச் செல்க" என்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறை யாருடையதாக இருந்தாலும்
பொறுப்பு நம்முடையது!
– ஸ்ரீ அரவிந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# தற்காலிக நிலைமை என தப்புக்கணக்குப் போடாதீர்கள்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை எவரும் தற்காலிகமானதெனக் கருதினால், அது தப்புக்கணக்காகவே இருக்கும்.

ஆக, பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை இரண்டு வருடத்தில், மூன்று வருடத்தில் மீண்டெழும் என யார் கணித்தாலும் அது அர்த்தமற்றது.

உண்மையில் நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமை நீங்குவதாயின், அதற்கான திட்டங்களும் முதலீடுகளும் ஏற்றுமதி சார் உற்பத்திகளும் தாராளமாக நடந்தாக வேண்டும்.

நிலைமை இதுவாக இருக்கையில், சமகால சூழமைவு தற்காலிகமானதென்றும் பிரதமராகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க பிச்சாபாத்திரம் ஏந்தி உலக நாடுகளிடம் தண்டிக்கொண்டு வருவார் என்றும் நினைத்து நாம் வாழாதிருந்தால் அதன் விளைவு பட்டினிச்சாவாகவே இருக்கும்.

ஆம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டுத் தூதுவர்களுடனும் உலக வங்கி மற்றும் ஐ.நா சபைப் பிரதிநிதிகளுடனும் நடத்துகின்ற சந்திப்பானது சில மாதங்களுக்கேனும் நிலைமையைச் சமாளிப்பதற்கானது.

எனினும் பிரதமர் ரணிலின் முயற்சிகள் இதுவரை வெற்றி பெறவில்லை.

மாறாக, எரிபொருளுக்கான வரிசையும் எரிவாயுவுக்கான காத்திருப்பும் தொடர்கிறது.

இந்த நிலையில் எதிர்வரும் மாதங்களில் உணவுத் தட்டுப்பாடு தலைவிரித்தாடும் எனப் பிரதமர் உள்ளிட்ட அனைவரும் எதிர்வுகூறியுள்ளனர்.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க; அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாட்டால், எதிர்வரும் ஜூன் மாதம் நாட்டில் கலவரம் வெடிக்கும் என அடித்துக் கூறியுள்ளார்.

எனவே நாட்டின் தற்போதைய நிலைமை தற்காலிகமானதென யாரும் நினைத்து விடக்கூடாது.

ஆகவே ஏற்படப்போகும் பஞ்சத்தினின்றும் மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதாயின், உடனடியாக சிறுதானியச் செய்கையிலும் மரக்கறி உற்பத்தியிலும் வீட்டுத்தோட்ட பயிரிடலிலும் ஈடுபட வேண்டும்.

தவிர, எங்கெல்லாம் நிலம் வெறுமையாய் கிடக்கிறதோ அந்த நிலங்களில் வாழையும் தென்னையும் மா, பலா உள்ளிட்ட பழவகைகளையும் செய்தாக வேண்டும்.

இந்த முயற்சி வெற்றிபெற மரக்கறி விதைகள், சிறுதானியங்கள், தென்னை நாற்றுக்கள் என்பவற்றை பொதுமக்களுக்கு இலவசமாக வழங்க வேண்டும்.

இதுவிடயத்தில் பொது அமைப்புகள், கொடையாளர்கள் தங்களின் மேலான உதவிகளை வழங்குவது காலத்தின் கட்டாய தேவையாகும்.

# முன்னாள் அமைச்சர்களை நியமிப்பதன் மூலம் பிரச்சினைகளை தீர்க்க முடியாது

## பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்களை மீண்டும், மீண்டும் நியமிப்பதன் மூலம் நாட்டின் பிரச்சினைகள் தீராது என்பதை ஜனாதிபதியும் பிரதமரும் புரிந்து கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ந்தும் காலத்தை வீணடிக்காது நாட்டை ஆட்சிசெய்யக்கூடிய அணியிடம் நாட்டை ஒப்படைத்து விட்டு பதவி விலக வேண்டும் என ஜனாதிபதி உட்பட அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்று கோட்டா கோ கம போராட்டத்தை காட்டிக் கொடுத்துள்ளார் என்றே நாங்கள் கருதுகிறோம். எந்த நிபந்தனைகளையும் விதிக்காது அவர் பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டதே இதற்கு காரணம்.

குறைந்தது அவர் பிரதமராக பதவியேற்று அமைச்சரவை அமைச்சர்களுடன் கலந்துரையாடி நாட்டின் அடிப்படை பிரச்சினைகளை அடையாளம் கண்டு எரிவாயு, மின்சாரம், பசளை, எரிபொருள், மருந்துகளை பெற்றுக்கொடுக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பணவீக்கம் தொடர்பான பிரச்சினையை தீர்க்க வேலைத்திட்டங்கள் இல்லை. அமைச்சர்கள் மாறினாலும் அரசாங்கத்தை புதிய அரசாங்கம் என்று ஏற்றுக்கொள்ள முடியாது.

புதிய பிரதமர் பதவியேற்றார். புதிய அரசாங்கம் பதவியேற்றது எனினும் அரசியல் ஸ்திரத்தன்மையோ, வெளிநாடுகளில் உள்ள இலங்கை தொழிலாளர்கள் உட்பட பணத்தை அனுப்புவோருக்கு ஒரு நம்பிக்கை ஏற்படவில்லை.

பிரதமர் தனது சிஷ்யர்களை கொண்டு குழு ஒன்றை நியமித்துள்ளார். அந்த குழுவில் வஜிர, அகில, ரங்கே பண்டார போன்றவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமது ஆதரவாளர்களை அருகில் அழைத்து வைத்துக்கொண்டு நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது. பிரதமர் நியமித்துள்ள இந்த குழு காரணமாக அமைச்சரவை அவமதிப்புக்கு உள்ளாகும் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

# நுவரெலியாவில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

(நுவரெலியா)

நுவரெலியா நானுஓயா வங்கிஓயாவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நானுஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட நானுஓயா வங்கிஓயா தோட்டத்தில் நேற்று காலை மரம் இழுப்பதற்காக கொண்டுவரப்பட்ட கிரேன் வண்டி சுமார் 30 அடி பள்ளத்தில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் 4 பேர் படுகாயமடைந்த நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் 43 வயதுடைய கினிகத்தனை பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ரதாலையில் இருந்து வங்கிஓயா செல்லும் பாதை கடந்த 6 மாதத்திற்கு முன் செப்பனிட ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அது தற்போது இடைநிறுத்தப்பட்டிருப்பதால் குறித்த பாதையை மறித்து குன்றும் குழியுமாக போட்டு விட்டு சென்றதாலும் இப் பாதையில் முறையாக போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் இருந்ததன் காரணத்தால் இவ் விபத்து ஏற்பட்டது என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துக்கான காரணம் தொடர்பாகவும் விபத்து தொடர்பாகவும் நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# பருத்தித்துறையில் தீக் காயத்துடன் பெண் வைத்தியசாலையில் அனுமதி

(கரணவாய்)

பருத்தித்துறையில் தீக் காயத்துடன் பெண் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று பருத்தித்துறை கொட்டடி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் 24 வயதுடைய பெண் ஒருவரே தீக் காயத்திற்கு இலக்காகிய நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60)

# உணவு நெருக்கடிக்கு தீர்வு காண சர்வதேச உதவி

இலங்கையில் ஏற்படக்கூடிய உணவு நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக சர்வதேசத்தின் உதவியைக் கோருவதற்கு உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு இணக்கம் வெளியிட்டுள்ளது.

அந்த சங்கத்துடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தையில் இதற்கான உறுதிப்பாடு வழங்கப்பட்டதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது பேஸ்புக் தளத்தில் பதிவிட்டுள்ளார். (ம-7)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## இறை இன்பத்தை அனுபவிக்க...

❖ ஒரு பக்தனுக்கு வறட்டு விளக்கங்களெல்லாம் அவன் கொண்டுள்ள எண்ணத்தை உறுதிப்படுத்த தேவைப்படுகிறதே தவிர அதற்கு மேல் அவற்றால் எந்தப் பயனுமில்லை. ஏனென்றால் அவன் செல்லும் பக்தி என்னும் இந்தப் பாதை அவனை வெகு சீக்கிரம் தெளிவற்றதும், கொந்தளிப்பு மிக்கதுமான ஆராய்ச்சி நிலைகளைக் கடக்கச் செய்கிறது. மேலும் இது இறைக்காட்சி பெறும் நிலைக்கு உயர்த்தத் தகுதி வாய்ந்ததாக உள்ளது.

❖ இறைவனின் திருவருளால் அவன் செய்த உன்னத நிலையை விரைவில் அடைந்து விடுகிறான். அங்கே கற்பனைக்கோ, வலுவிழந்த ஆராய்ச்சிக்கோ இடமில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 71

**இரத்தினபுரி மாவட்டத்தில் பிரதேச செயலக மட்டத்தில் சிறுபான்மைச் சமூகங்கள்-2012**

| பிரதேச செயலகம் | தமிழ் | முஸ்லிம் |
|---|---|---|
| எஹலியகொடை | 3268 | 3449 |
| குருவிட்ட | 6100 | 1845 |
| கிரிஎல்ல | 1186 | 11 |
| இரத்தினபுரி | 19322 | 5768 |
| இம்புல்பே | 8556 | 71 |
| பலாங்கொடை | 11165 | 6024 |
| ஓபனாயக்க | 2009 | 253 |
| பெல்மதுளை | 12439 | 464 |
| எலபாத | 2131 | 35 |
| அயகம | 4260 | 3 |
| கலவான | 7522 | 19 |
| நிவித்திகல | 10394 | 500 |
| கஹவத்த | 8778 | 1359 |
| கொடகாவெல | 14423 | 2483 |
| வெலிகேபொல | 365 | 1 |
| எம்பிலிபிட்டிய | 120 | 47 |
| கொலென்ன | 4523 | 14 |
| மொத்தம் | 116,561 | 22346 |

**மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால், சப்ரகமுவ மாகாண சபையில் உள்ள இரத்தினபுரி மாவட்டத்திற்கு 24 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன் படி இரத்தினபுரி மாவட்டம் 12 மாகாண சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யக் கூடிய வகையில் அத்தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.**

இரத்தினபுரி மாவட்டத்தில் 17 பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட 575 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 1,088,007 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 90,667 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

**இரத்தினபுரி மாவட்டத்தில் 17 பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட 575 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 1,088,007 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 90,667 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.**

இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் 15.11.2017 மாலை பொதுமக்களுடன் நடைபெற்ற கூட்டத்தில், பெற்றுக்கொள்ளப்பட்ட 14 பிரேரணைகளுடன், பொதுமக்களிடம் எழுத்து மூலம் சமர்பிக்கும்படி கேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட 6 பிரேரணைகள் அடங்கலாக மொத்தம் 20 பிரேரணைகளை குழு பெற்றுக் கொண்டது.

சில பிரேரணைகளின் பரிந்துரைகள் தேர்தல் தொகுதியை எல்லை நிர்ணயம் செய்வதற்கு தேவையான தகவல்களைக் கொண்டிருக்கவில்லை. அநேகமான பிரேரணைகளின் பரிந்துரைகளில் எல்லை நிர்ணயம் பிரதேச செயலக பிரிவுகளின் எல்லைகளையும் உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும் அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தன.

ஒரு பிரேரணை உள்ளூர் அதிகார சபை எல்லைகளைக் கூறாக்காமல் பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளை (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை) கருத்திற்கொண்டு வாக்கெடுப்புப் பிரிவுகளை 2-3 தேர்தல் தொகுதிகளாக எல்லை நிர்ணயம் செய்யும்படி கேட்டிருந்தன.

மேலும் பரிந்துரைக்கப்பட்டவற்றில் தொகுதிகளுக்கிடையிலான சனத்தொகைச் செறிவு விகிதாசாரத்திற்கு ஏற்ப இல்லாமல் இருந்ததாலும், பல ஆலோசனைகள் 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3(A) (4) (b) இன் நோக்கத்திற்கேற்ப அமையாததாலும் ஏனைய பிரேரணைகள் போதுமான தகவல்களைக் கொண்டிராததாலும் இப் பிரேரணைகளை குழுவால் கருத்தில் எடுக்க முடியவில்லை.

அதுமட்டுமன்றி அனைத்து மக்கள் தொகை தகவல்களும் நிர்வாகப்பிரிவு அடிப்படையில் மட்டுமே கிடைக்கப்பெற்றன. அதாவது, கிராம உத்தியோகத்தர் பிரிவுத்தகவல் மற்றும் பிரதேச செயலக பிரிவுத்தகவல் ஆகும். குழுவானது உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும் பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளையும் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை) போன்றவற்றை விட பிரதேச செயலகங்களின் தகவல்களையே எல்லை நிர்ணயத்திற்கு அடிப்படையாக எடுத்துக்கொண்டது.

அதேநேரத்தில் நடைமுறை நோக்கங்களுக்காக தற்போது இருக்கும் ஏனைய தேர்தல் தொகுதிகளின் எல்லைகளைப் கூறு போடுவதை குறைப்பதற்கான தேவையை அறிந்து கொண்டது. எவ்வாறாயினும் சாத்தியமான வேளைகளில் குழுவானது முன்வைக்கப்பட்ட பிரேரணை முன்மொழிவுகளை முடியுமானவரை பிரதேச செயலகங்களைத் தேர்தல் தொகுதிகளுக்கு இணைக்கும் போது சேர்த்துக்கொண்டுள்ளது.

சில சமர்ப்பிப்புகள் ஒரு சிறுபான்மை இனத்தின் (தமிழர்) பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தது. ஒரு சில பிரேரணைகள் இத்தேர்தல் தொகுதிகளுக்கான புவியியல் பிரதேசங்களை குறிப்பிட்டுள்ளன.

ஆனால் முழு மாவட்டத்தின் சனத்தொகையில் பல பிரதேச செயலகங்களில் தமிழர்கள் 116,561 (11%) பரம்பலாக உள்ளடங்கியிருந்ததை குழு அவதானித்தது. இதனால் அனைத்து இனத்தவர்களினதும் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து முடியுமான வகையில் குறிப்பிட்ட தொகுதிகளில் அவர்களின் சமூக விருப்பங்களை நிறைவு செய்யும் வகையில் தொகுதிகள் எல்லை நிர்ணயம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

**சில சமர்ப்பிப்புகள் ஒரு சிறுபான்மை இனத்தின் (தமிழர்) பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தது.**

ஒரு சமர்ப்பிப்பு, தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயத்தை இனம், சனத்தொகை மற்றும் பிரதேசத்தின் பரப்பளவு என்பவற்றை கருத்திற்கொண்டு அமைய வேண்டும் என பரிந்துரைத்துள்ளது.

இப் பரிந்துரை முதன்மை சட்டத்திலும் 2017 திருத்தச்சட்டத்திலும் குறிப்பிட்ட நோக்கத்திற்கு ஒத்துப்போவதாக உள்ளதை குழு அவதானித்தது.

எட்டு (08) சமர்ப்பிப்புகளுக்கு குழுவினால் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. ஏனென்றால் அவை எந்த முன்மொழிவுகளையும் கொண்டிருக்கவில்லை மற்றும் குழுவின் பொறுப்பு ஆணைகளுக்கு உட்பட்டதாகவும் அமையவில்லை.

தொகுதிகளுக்கு பெயரிடும் போது, சரித்திர பிரசித்தி பெற்ற பெயர் இடப்பட வேண்டிய தேவை இல்லாத சந்தர்ப்பத்தில் தொகுதிகளின் பெயர்கள், அத் தொகுதியிலுள்ள ஒரு பிரதேச செயலகத்தின் பெயரை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் சனத்தொகை அடிப்படையில் இட தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானிக்கப்பட்ட அநேகமான தொகுதிகளின் பெயர்கள் பெறப்பட்ட பல பிரேரணைகளுக்கு ஒத்துப்போகிறது.

சுருக்கமாகக் கூறினால் 6 பிரதேச செயலக பிரிவுகள் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 9 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், 2 பிரதேச செயலகப் பிரிவுகள் 3 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும்,

தொகுதிக்கான சராசரி மக்கள் தொகையை விட்டு −6.4% மற்றும் + 7.1% இற்கும் வெளியே செல்லாதவாறு இருக்கக் கூடியதாகவும் எல்லா இனத்தவர்களின் சம நிலைப்பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து இரத் தினபுரி மாவட்டம் 12 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாக பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

அத் தொகுதிகளாவன எஹலியகொடை (55), எலபாத (50), குருவிட்ட (36), இரத்தினபுரி (40), இம்புல்பே (53), பலாங்கொடை (69), வெலிகோபொல (69), கஹவத்த (40), பெல்மதுளை (40), கலவான (51), கொலொன்ன (48), எம்பிலிபிட்டிய (24) ஆகும். அடைப்புக் குறிக்குள் தொகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. விபரம் அட்டவணை (S2) இல் தரப்பட்டுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 பவுண்...

ழமை அதிகாலை 1.00 மணியளவில் துன்னாலை வடக்கு பகுதியில் அமைந்துள்ள வீட்டில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அருகில் உள்ள வீட்டில் இருந்த ஒருவர் இறந்ததாக கூறப்பட்டதைத் தொடர்ந்து அவசரமாக வீட்டை பூட்டிவிட்டு திறப்பை எடுக்காது சொன்றதை சாதகமாக பயன்படுத்தி வீட்டின் அலுமாரியில் இருந்த பத்துப் பவுண் நகை திருடப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (ம-7,60)

## எரிவாயு...

வாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் இன்றைய தினம் யாரும் வரிசையில் காத்திருக்க வேண்டாம் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் சமையல் எரிவாயுவுக்கு நாடு முழுவதும் தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் எரிவாயு கப்பல் தொடர்பில் லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

7,500 மெட்ரிக் தொன் எரிவாயு கப்பல்கள் இரண்டிற்கு 6.5 மில்லியன் அமெரிக்க டொலர் பணம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிடைப்படையில் 3,500 மெட்ரிக் தொன்னுடனான முதலாவது கப்பல் எதிர்வரும் வியாழக்கிழமை கொழும்பை வந்தடையவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம-7)

## செப்டெம்பரில்...

பிரதமர் அலுவலகத்தில் இந்தக் குழு கூடிய போதே மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் மாதாந்த அரிசி தேவை 200 ஆயிரம் மெற்றிக் தொன் எனவும் தற்போதைய அரிசி கையிருப்பு செப்டெம்பர் நடுப்பகுதிக்குள் தீர்ந்துவிடும் எனவும் குழு தெரிவித்துள்ளது. (ம-7)

## புதிய அமைச்சர்...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் ஜனாதிபதி மாளிகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அதற்கமைய கடற்றொழில் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தாவும் ஊடகத்துறை அமைச்சராகவும், போக் குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச் சராகவும் பந்துல குணவர்தனவும் சுகாதார அமைச்சுக்கு மேலதிகமாக நீர்வளங்கள் அமைச்சராக கெஹலிய ரம்புக்வெல்லவும் அமைச்சர் ரமேஸ் பத்திரண, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கு மேலதிகமாக, கைத்தொழில் அமைச்சராகவும் புத்த சாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சராக விதுர விக்ரம நாயக்கவும் சுற்றாடல் அமைச்சராக நஸீர் அஹ மட்டும் நீர்ப்பாசனத்துறை அமைச்சராகவும், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சராகவும் ரொஷான் ரணசிங்கவும், சத்தியப் பிரமாணம் செய்துகொண் டுள்ளனர்.

இதற்கு முன்னர் 14 அமைச்சர்கள் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர். (ம-7)

## நெருக்கடியை...

யின் தலைவர் அனுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவி வரும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வு காண்பதற்கு பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதே ஒரே தீர்வு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் கோரிக்கைகளை அரசியல் வாதிகள் நகைச்சுவையாக எடுத்துக் கொண்டனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எரிவாயு, பால்மா, எரிபொருள், உரம் போன்றவற்றை மக்கள் கோரிய போது ஜனாதிபதியோ, அமைச்சர்களோ அதற்கு செவிசாய்க்கத் தவறியதனால் மக்கள் தொடர்ந்தும் கோருவதில் பயனில்லை என தீர்மானித்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே கோட்டாபயவை வீடு செல்லுமாறு மக்கள் கோரியதாகவும் அந்த வீட்டில் ரணில் வந்து அமருவதை மக்கள் விரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## அமைச்சரவை...

பட்டுள்ளார்.

அத்துடன்,. புதிய அமைச்சரவையின் இணைப் பேச்சாளர்களாக மஹிந்த அமரவீர, மனுஷ நாணயக்கார மற்றும் காஞ்சன விஜேசேகர ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## அத்தியாவசிய...

வன தலைவர்களுக்கு அறிவுறுத்தும் சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளது.

குறித்த சுற்றறிக்கை இன்று (செவ்வாய்கிழமை) வெளியிடப்படவுள்ளதாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ம-7)

## எரிபொருள் தட்டு...

உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள சாமிமலை டீசைட் தோட்டத்தைச் சேர்ந்த தரம் 4 இல் கல்வி பயிலும் 8 வயது மாணவன் கடந்த சனிக்கிழமை காலை வயிற்று வலியால் துடிதுடித்து மரணித்துள்ளதாக அவரது பாட்டி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவனது பாட்டி கூறுகையில்,

வயிற்று வலி காரணமாக தனது மகளின் ஒரே மகனை (8வயது) வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல என்னால் இய்ன்றவரை முச்சக்கர வண்டி , வாகணங்களைத் தேடியலைந்த போதும் எரிபொருள் இல்லாத காரணத்தால் ஒரு வாகனமும் கிடைக்காத நிலையில் 1990 அம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்ல எத்தனித்த போது அம்புலன்ஸில் வந்தவர் சிறுவனை பரிசோதனை செய்த போது, சிறுவன் இறந்து விட்டதாகக் கூறினார்.

அதனைத் தொடர்ந்து பல சிரமங்களுக்கு மத்தியில் முச்சக்கர வண்டி மூலம் வைத்தியசாலையில் அனுமதித்த போது சிறுவன் இறந்து விட்டதால், சடலம் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

சிறுவனின் தந்தை சிறையில் உள்ளதாகவும் தாய் தோட்டத்தில் வேலை குறைவால் கொழும்பில் பணி புரிந்ததாகவும் குறித்த சிறுவனின் பாட்டி மேலும் தெரிவித்தார். (ம-7)

## எரிபொருள்...

ருள் நிலையத்தில் நேற்றிரவு மக்கள் இரண்டு நீண்ட வரிசையில் பெற்றோல் பெறுவதற்கு காத்திருந்த போது பெற்றோல் வழங்குவதை இடை நிறுத்தியதால் ஒரு மணி நேரம் குழப்ப நிலை காணப்பட்டது.

எரிபொருள் நிலைய நடத்துனருக்கும் மக்களுக்குமிடையில் சரமாரியான வாய்த் தர்க்கம் எற்பட்டது.

மக்களை சமரசப் படுத்தும் செயற்பாட்டில், கடமையிலிருந்த கோப்பாய் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர்.

மக்கள் நேற்று இரவு 9.00 மணியிலிருந்து, 10.00 மணி வரை இடைவிடாது போராடியதால் மக்கள் கோரிக்கையை ஏற்று மீண்டும் பெற்றோல் வழங்க எரிபொருள் நிலைய நடத்துனர் இணங்கியதை அடுத்து மீண்டும் மக்களுக்கு பெற்றோல் வழங்கப்பட்டது.

மேலும் குறித்த ஏரிபொருள் நிலையத்தில் நேற்றைய தினம் மாலை நேரமும் குழப்ப நிலை காணப்பட்டதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர். (ம-7)

## 21 ஆவது திருத்த...

வழங்கிய 20 ஆவது திருத்தத்தை ரத்து செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம் தற்போதுள்ள ஆணைக்குழுக்களின் அதிகாரங்களை மேலும் வலுப்படுத்துவதற்கும் அவற்றை சுயாதீனமாக்குவதற்கும் முயற்சிக்கிறது.

இந்த பிரேரணை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால், இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள் என மூத்த அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். (ம-7)

## எரிபொருள் விலை...

விலை 400 ரூபாயாகவும், சுப்பர் டீசல் லீட்டர் ஒன்றின் விற்பனை விலை 445 ரூபாயாகவும் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## வரவு-செலவு...

சந்தித்து புதிய வரவு-செலவு திட்டம் மற்றும் எதிர்கால பொருளாதார திட்டங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது, மூலதனச் செலவினங்களை கணிசமாகக் குறைக்கும் வகையில் புதிய வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் யுத்தத்துடன், உள்ளூர் சந்தையின் தவறான நிர்வாகத்தினால் உணவுப் பற்றாக்குறையை நாடு எதிர்கொண்டுள்ளதாக பிரதமர் மேலும் விளக்கமளித்துள்ளார்.

இந்த உணவுப் பற்றாக்குறை இலங்கையை மாத்திரமன்றி உலக சந்தையையும் பாதிக்கும்.

பற்றாக்குறையின் தாக்கத்தை குறைக்க அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

மேலும், பொருளாதார உரிமைகளை உள்ளடக்கிய பொருளாதாரக் கொள்கை கட்டமைப்பு அரசியலமைப்பில் உள்ளடக்கப்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார். (ம-7)

# இலங்கைக்கு கடத்துவதற்காக தமிழகத்தில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த களைகொல்லி மருந்து மீட்பு



இலங்கைக்கு கடத்துவதற்காக தமிழகத்தின் தூத்துக்குடி அருகே காட்டுப்பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3 லட்சம் மதிப்பிலான களைக்கொல்லி மருந்து மரைன் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன், விசாரணை நடைபெற்று வருகின்றது.

தூத்துக்குடி மாவட்டம் தருவைகுளம் கடற்கரை பகுதியில் இருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக காட்டுப்பகுதியில் மர்மமான பொருள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து அப்பகுதிக்கு விரைந்து சென்ற மரைன் பொலிஸார் காட்டுப்பகுதியில் 12 சாக்கு மூட்டைகளில் பதுக்கி வைக்கப்பட்டு இருந்த 3 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 375 லீட்டர் அளவுள்ள விவசாயத்திற்கு பயன்படுத்தக்கூடிய களை கொல்லி மருந்தை மீட்டுள்ளனர்.

காட்டுப்பகுதியில் களை கொல்லி மருந்து பதுக்கி வைத்த மர்ம நபர்களை பற்றி பொலிஸார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர். (ம-7)


கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3006
சீட்டிழுப்பு திகதி 23.05.2022
அச்சிடப்பட்டுள்ள திகதி 18.05.2022
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 40 49 52 73
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 23/05/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1112
வெற்றி எழுத்து O
சுப்பர் இலக்க 12
வெற்றி இலக்கங்கள் 11 30 76 77

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
லொத்தர்சீட்டு அச்சிடப்பட்ட திகதி 2022.05.18
சீட்டிழுப்பு திகதி 23.05.2022
சீட்டிழுப்பு இலக்கம் 073
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 11 28 39 57
துலாம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/05/22
சீட்டிழுப்பு இலக்கம் 4764
ஆங்கில எழுத்து L
வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 6 8 7 9 3
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 18.05.2022
சீட்டிழுக்கப்பட்ட திகதி 23.05.2022
சீட்டிழுப்பு இலக்கம் 794
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 19 21 22 56
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாக்குமூலம் வழங்கிய பின்

# பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவி விலகினார்

(கொழும்பு)

பொதுமக்கள்பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய ஜகத் அல்விஸ் தனது பதவி விலகல் கடிதத்தை கையளித்துள்ளார்.

நேற்றுக் காலை குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் சுமார் ஒன்பது மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கிய பின்னர் அவர் தனது பதவி விலகல் கடிதத்தை கையளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி காலி முகத்திடலில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பிலேயே அவரிடம் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளினால் வாக்குமூலம் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம-7)


# இலங்கையில் தொடரும் மோசமான நிலை

## மொத்த பணவீக்க விகிதம் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஏப்ரல் மாதத்தின் மொத்த பணவீக்க விகிதம் 33.8 சதவீதம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டிற்கமைய இந்த விபரம் வெளியாகியுள்ளது.




2022ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்திற்கான அனைத்துப் பொருட்களுக்கான தேசிய நுகர்வோர் விலைக் குறியீடு 190.3 ஆக பதிவாகியுள்ளது.

மேலும் இது குறியீட்டு புள்ளிகளில் 17.6 அதிகரிப்பை பதிவு செய்துள்ளதுடன், 2022ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் ஒப்பிடும் போது, இதன் குறியீடு 172.7 ஆகக்காணப்பட்டுள்ளது.

ஆண்டு அடிப்படையில் தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டால் அளவிடப்படும் மொத்த பண வீக்க விகிதம் இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 33.8 சதவீதமாக உள்ள தென குறிப்பிடப்படுகின்றது.

(ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (11484)

076 825 7716 (ஆகாஸ்)



கண்ணீர் அஞ்சலி

நல்லூர்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர்

அமரர் F.X.அன்ரன்



அவர்களது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்
யா/பூம்புகார் அ.த.க.பாடசாலை

(11489)



உடனடி வேலை வாய்ப்பு

யாழ் நகரப்பகுதியில் உள்ள நிறுவனத்தில் சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு வேலைக்கு ஆள் தேவை

(C-4360)



சம்பளம் - 30'000/-

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777



வேலைவாய்ப்பு

ஊடக நிறுவனம் ஒன்றுக்கு
- வீடியோ எடிட்டிங்
- செய்தி வாசிப்பாளர்கள்

தேவை.

தொடர்பு:- (11490)
077 102 0070



கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 19 - 07 - 1962

மறைவு 20 - 05 - 2022



அமரர் F.X. அன்ரன்

(கோட்டக்கல்விப் பணிப்பாளர் - நல்லூர்)

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்கி, அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்

(C-4364)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )

- A32, A9 இணையும் பிரதான வீதியில் ( றவுண்டப் வோட் )
- A9 வீதியுடன் 6 பரப்பும்
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் மருந்தகங்கள் அமைப்பதற்கும் ( பார்மசி )
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்
காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

(11488)

077 814 7389, 077 241 7589 - ஜெயம்



காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு

நிலப்பரப்பு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம் கிழக்கு எல்லைகள்.
- சமுர்த்தி வங்கி வடக்கு எல்லைகள்.
- கைதடி சந்தி 200 மீற்றர் தூரம்.
- வட மாகாண சபை 250 மீற்றர் தூரம்.
- மூன்றுவழிப்பாதையுடன்
  01. A9 வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
  02. கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடிப் பாதையுடன்)
  03. சமுர்த்தி வங்கி அருகாமை வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
- சுற்றி நல்ல சூழலுடன் நல்லதண்ணீர் நிலம்.
- செம்மண் காணி.

பார்வையிடும் நேரம் காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

(11491)

077 623 4204, 077 288 0152,
076 658 3621


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.